DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel: 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA Mortgage Solutions Inc.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
# உதயன்
$1.00
416-752-1524
416-752-6703

உதயம் 1297 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday February 12, 2021

# March Break becomes April Break due to Pandemic



## கோவிட்-19 தொற்று காரணமாக பங்குனி விடுமுறை சித்திரை விடுமுறையாகியது

ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த வசந்த காலத்தில் கிட்டும் விடுமுறையான பங்குனி விடுமுறை சித்திரை விடுமுறையாக நேற்று ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளது. -

இந்த ஆண்டு, தொற்றுநோய் காரணமாக மார்ச் மாதத்தில் வரும் விடுமுறை கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு பின்னர் நேற்றைய அறிவிப்பைத் தொடர்ந்து ஏப்ரல் 12 முதல் 16 வரை அமுலுக்கு வரவுள்ளது என மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அறிவித்தார். *(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கம்)*

# தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் உறவுகளின் நலன்கள் தொடர்பாக இணக்கமுள்ள ஏனைய அரசியல் தலைவர்களோடு இணைந்து செயற்படுவேன்`

### “ரொரன்ரோ மனித நேயக் குரல்“ நடத்திய கருத்தரங்கில் தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவிப்பு

”தமிழ்நாட்டில் நாற்பது வருடங்களுக்கு மேலாக குடியுரிமை அந்தஸ்த்து எதுவுமின்றி எதிர்பார்ப்புக்களுடன் காத்திருக்கும் ஈழத் தமிழ் உறவுகளின் நலனில் எமது கட்சி கடந்த பல ஆண்டுகளாக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றது. அவ்வாறு எமது மண்ணில் உள்ள ஈழத்தமிழ் உறவுகளின் நலன்கள் தொடர்பாக நான் பல தலைவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோரோடு பேசி வருகின்றேன். எனினும் இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டில்இணக்கமுள்ள ஏனையஅரசியல் தலைவர்களோடு இணைந்து செயற்படுவேன்”

இவ்வாறு, கனடாவில் இயங்கிவரும் “ரொரன்ரோ மனித நேயக் குரல்“ அமைப்பு, கடந்த 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடத்திய இணையவழிக் கருத்தரங்கில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் உற்சாகத்துடன் தெரிவித்தார்.
*(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*




INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron AD Team

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404


THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
Where life begins...
When You Realize
You Want to
Spend the
Rest of Your Life
with Somebody,
You Want
the rest of Your Life
to Start
as soon as Possible
THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
HAPPY
Valentines
DAY
வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விடயங்களை
அறியவும், இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
80 Nashdene Rd, Unit# F119, Scarborough ON M1V 5E4
416 989 6565
www.theguardianhomes.com

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

GHURUS TOWING
Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000

NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN: (416) 894-6244

BASEMENT for RENT
Scarborough நகரில்
Meadowvale / Ellesmere
சந்திப்புக்கு அருகில்
2 அறைகள் பொண்ட basement வாடகைக்கு உண்டு.
Separate entrance மற்றும் car parking வசதிகள் ஆகியன உண்டு.
பெருந்தெரு 401 மற்றும் பஸ் வசதிகளும் அருகில்.
தொடர்புகளுக்கு:
(647) 409-1552

HOUSE CLEANERS WANTED
House Cleaning Company Now Hiring Maids.
Day Shift ONLY.
NO Weekends.
Located in Markham
Call: (905) 472-6042

BASEMENT for RENT
2 bedroom basement with separate entrance மற்றும் எல்லா வித வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.
குடும்பம் விரும்பதக்கது.
Call: (416) 821-2181

உதயன் கதிரோட்டம்

# Two leaves and a bud என்ற ஆங்கிலக்கூற்றுக்குள்ள மதிப்பு அதனை கிள்ளிஎடுக்கின்றவர்களின் கரங்களுக்கு இல்லை

மற்றும் தேயிலையின் இனம் போன்றன இந்த தனித்துவத்துக்கானகாரணங்கள் ஆகும்.இலங்கைத் தேயிலைக்குரிய நற்பெயர் நாடு சுதந்திரமடைந்தபின்னரும் தொடர்ந்து நிலவி வந்தது. ஆனால் காலப்போக்கில் இலங்கைத் தேயிலையின் நற்பெயருக்கு சிறு களங்கம்ஏற்படலானது. அதன் காரணமாக உலகின் சில நாடுகள் இலங்கைத்தேயிலைக்குப் பதிலாக வேறு நாடுகளிலிருந்து தேயிலையை குறைந்தவிலையில் இறக்குமதி செய்யத் தொடங்கின.அதேசமயம், இலங்கையிலும் தேயிலையின் உற்பத்தியும் தரமும்சிறிது வீழ்ச்சியடையத் தொடங்கின.இவற்றுக்கெல்லாம் அப்பால், இலங்கைத் தேயிலைக்கு சர்வதேசநற்பெயரை பெற்றுக் கொடுத்த தோட்டத் தொழிலாளர்களின்வாழ்க்கைத் தரம் சம்பந்தமான விடயமும் இங்கு பிரதானமாககுறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். அம்மக்களின் அர்ப்பணிப்பினாலேயே மலையகத்தில்பெருந்தோட்டங்களும் வீதிக் 6டமைப்புகளும் உருவாகின.அவர்களால் தோட்டங்கள் உருவாகியதே தவிர, அம்மக்களின்வாழ்க்கைத் தரமானது இன்னும் இரு நூற்றாண்டு கால பழைமைகொண்டதாகவே காணப்படுகின்றது. ஆங்காங்கே வீடமைப்புத் திட்டங்கள்உருவாகியதென்பது உண்மைதான். ஆனாலும் அன்றைய காலத்து லயன்காம்பிராக்களில் அவர்கள் இன்னும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள்.இவ்வாறான நிலையிலேயே தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம்ரூபா சம்பள விவகாரத்தில் நல்லதொரு முடிவு எட்டப்பட்டுள்ளது. சம்பளஉயர்வுக் கோரிக்ை“யப் பொறுத்த வரை அதனை குறிப்பிடத்தக்கமுன்னேற்றமெனக் கொள்ளலாம். ஆனாலும் ஆயிரம் ரூபாவுடன்அம்மக்களின் துன்பங்கள் யாவும் தீர்ந்து விடவில்லை. அடுத்து என்ன நடக்கும் என்பதும் இன்னும் தெரியாமலே உள்ளது. அவர்களதுஉரிமைகளுக்காக போராடுகின்றோம் என்று சொல்லியதொழிற்சங்கத் தலைவர்கள் பின்னாளில் அமைச்சர்களாகவும்பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் வந்து தங்கள் வாழ்க்ை“யஉயர்த்திச் கொள்கின்றார்கள். ஆனால் தொழிலாளர்களதுவாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதில் தீவிரமான கவனம் செலுத்தப்படவேண்டும். நாட்டின் ஏனைய பிரதேச மக்களுக்கு நிகராக அவர்களும்வாழ்வதற்கான வழிவை.்.ள் ஏற்படுத்தப்பட வேண்டும்.அப்போதுதான் இலங்கைத் தேயிலையின் தரமும் உயரும். ஆமாம்தற்போது கூட **two leaves and a bud** என்ற ஆங்கிலக்கூற்றுக்குள்ள மதிப்பு அதனை கிள்ளி எடுக்கின்றவர்களின்கரங்களுக்கு இல்லை.

# எதிர் வரும் 18 ஆம் தேதி இந்தியா முழுவதும்ரயில் போராட்டத்தை விவசாயிகள்நடத்துகிறார்கள்



மோடி அரசு விவசாயிகளுக்கு எதிரா.். கொண்டு வந்துள்ள வேளாண் சட்டங்களுக்கு எதிரான தங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தும் விதத்தில், வரும் 18-ம் தேதி நாடு முழுவதும் 4 மணி நேரம் ரயில்மறியல் போராட்டம் நடத்தப்படும். வரும் 14-ம் தேதி புல்வாமா தீவிரவாதத் தாக்குதல் நினைவாக மெழுகுவர்த்தி ஊர்வலம் நடத்தப்படும்என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேளண் சட்டங்“ளத் திரும்பப் பெறக்கோரி 6ந்த 70 நாட்களுக்கும் மேலாகடெல்லியின் பல்வேறு எல்லைகளில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதுவரை மத்திய அரசுக்கும், விவசாயிகளுக்கும் இடையே 11 சுற்றுப் பேச்சுவார்த்தை நடந்தும் அதில் எந்தப் பலனும், முடிவும் கிடைக்கவில்லை.இதற்கிடையே தங்கள் போராட்டத்தை வலுப்படுத்தும் விதமா.். 6ந்த சில வாரத்தில் நாடு முழுவதும் சில மணி நேரம் சாலை மறியல் போராட்டத்தை விவசாயிகள் நடத்தினர். இந்நிலையில் தங்கள் அடுத்த6டப் போராட்டமாக வரும் 18-ம் தேதி நாடு முழுவதும் 4 மணி நேரம் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து சம்யுக்தா கி'ான் மோர்ச்சா அமைப்பு நேற்று இரவு வெளியிட்ட அறிவிப்பில், “ வேளாண் சட்டங்களுக்கு எதிராக எங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளோம். வரும் 12-ம் தேதி முதல் ஒரு வாரம் நடக்கும் போராட்டத்தால் ராஜஸ்தானில் சுங்கச் சாவடிகளில் 6டணம் வசூலிக்.். கூடாது. வரும் 18-ம் தேதி நாடு முழுவதும் நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணிவரை ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும். இதுதவிர 6ந்த 2019-ம்ஆண்டு கா'மீர் புல்வாமா தாக்குதலில் கொல்லப்பட்ட 40 இந்திய வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக வரும் 14-ம் தேதி விவசாயிகள் மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலம் சென்று அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும் நடக்கும்” எனத் தெரிவித்துள்ளனர். முன்னதாக, பாரதிதய கிசான் யூனியன் தலைவர் ராகே' திகைத் அளித்த பேட்டியில், “ மத்தியில் ஆட்சி மாற்றத்துக்காக விவசாயிகள் யாரும் போராடவில்லை. அது நோக்கமும் இல்லை. எங்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அதனால்தான் எங்களின் பல்வேறு தலைவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்து பேசி வருகிறார்கள். எங்கள் பிரச்சினை“ள மத்திய அரசு தீர்த்துவைக்கும் வரை இந்தப் போராட்டம் தொடரும். மத்திய அரசு அதன் 6மையைச் செய்ய வேண்டும். வேளாண் சட்டங்“ளத் திரும்பப் பெற்று, குறைந்தபட்ச ஆதார விலையை உறுதி செய்வோம் எனத் தெரிவித்தார்.

# ஸ்காபுறோவில் கென்னடி-எக்ளிங்டன் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள சங்கர்அன் கோ நிறுவனம்



ஸ்காபுறோவில் கென்னடி-எக்ளிங்டன் சந்திப்குப்பு அருகில் அமைந்துள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில் பாரம்பரிய மூலிகைப் பொருட்கள் மற்றும் மூலிகை மருந்து வகைகள் அனைத்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. - தொலைபேசி எண்கள்: 416 759 5100 அல்லது 416 759 4916

கில்லி பிராண்ட் தயாரிப்புகள் அனைத்தும் சங்கர் அன் கோ வில் கிடைக்கின்றன. விசேட வலம்புரிச் சங்குகள், பிராமணர்களுக்கு தானம் வழங்கும் விசேட பொருட்கள், பாலர் பாடப் புத்தகங்கள், விசேட வாசனைத் திரவியங்கள், விசேட சவர்க்கார வகைகள் மிக்சி. கிறைன்டர்கள், றைஸ் குக்கர்கள், பிரசர் குக்கர்கள் ஆகியன திருத்திக் கொடுக்கப்படும். விசேட நறுமணம் கொண்ட சாம்பிராணிகள், வெண் குங்கிலியம் மற்றும் கருப்புக் குங்கிலியம் ஆகாசக் கிழங்கு. தொலைபேசி எண்கள்: 416 759 5100 அல்லது 416 759 4916

# நாய் குரைப்பது போன்று பாராளுமன்றத்தில் சத்தமிட வேண்டாம் என சுரேன் ராவனை எச்சரித்த சாணக்கியன்



"நாய் குரைப்பது போன்று இந்த பாராளுமன்றத்திற்குள்ளே சத்தம் எழுப்ப வேண்டாம். நீங்கள் ஒரு தேசியப் பட்டியல் எம்பி. ஆனால் நான் மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினர். உங்கள் பணிகளை அந்த கோட்டுக்குள் நின்று செய்யுங்கள். உரத்துச் சத்தமிடவேண்டாம்" இவ்வாறு இன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது தன்னை இடையூறு செய்த நியமன எம்பி சுரேன் ராவனை எச்சரித்தார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன். இவர் கிழக்கிலங்கை தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று 10ம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்த சுவாரஸ்யமான சம்பவம் மற்றும் கருத்து மோதல்கள் இடம் பெற்றன. இந்த விடயம் பற்றி பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மேற்படி முகநூல் பக்கத்தில் பின்வருமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

---------------------

*இன்று வரையிலும் தடுத்து வைக்கப்படுள்ள காணமல் ஆக்கப்படுள்ள அரசியல் கைதிகள் தொடர்பில் மற்றும் இராணுவ முகாம்கள் தொடர்பிலும் இன்றைய தினம் காரசாரமான விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.*

*இன்றைய தினம் நடைபெற்ற பாராளுமன்ற கேள்வி பதில்களின் போது நான் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்'விடம் சில கேள்விகளை தொடுத்திருந்தேன். அவையாவன,*

*1. தற்பொழுது நாட்டில் இருக்கின்ற அரசியல் கைதிகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும், அக் கைதிகள் இருக்கின்ற முகாம்கள் எத்தனை என்பதையும்,*

*2. அவர்களை விடுவிப்பது தொடர்பாக ஏன் இதுவரை காலமும் விரைவான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும்,*

*3. நாடு முழுவதிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதுகாப்புப் படையினர் இருக்கின்ற காணிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,*

*4. பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தனியார் காணிகள் மற்றும் அரசாங்க அலுவலக காணிகள் எத்தனை என்பதையும் பிரதம அமைச்சர் குறிப்பிடுவாரா?*

*இன்றேல் ஏன்?*

*அதற்குப் பதிலளித்த பிரதமர் அவர்கள்,*

*இலங்கையில் அரசியல் கைதிகள் எந்த அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்னும் விடயத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இலங்கையிலுள்ள மாவட்டங்களில் காணப்படும் நிலங்கள் சம்மந்தமாக பேசுவது தேசிய பாதுகாப்பிற்கு தடையாக இருக்கின்றதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் கூறியமையினால் நான் அதைப் பற்றி பேசி-னால் அது தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பாக அமையும் என்பதனால் அதைப் பற்றி இங்கு கூறவில்லை என்றுரைத்தார்.*

*அவர் அளித்த பதிலில் எனக்கு திருப்தி இன்மையால் நான் அதனை விளக்கமாக அவருக்கு எடுத்துரைத்தேன். அரசியல் கைதிகளில் பலர் நான் பிறப்பதற்கு முதல் இருந்தே சிறைச்சாலைகளில் இருக்கின்றார்கள். அதிலும் தற்போது ஒரு சில வருடங்களாக அவர்கள் இறந்து கொண்டு வருகிறார்கள். உங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஒன்று அரசியல் கைதி-களை விடுவிப்பது ஆகும். வட கிழக்கு முழுவதிலும் இதனை சொல்லி இருந்தீர்கள். நாமல் ராஜபக்ஷ அவர்களும் சிறைச்சாலையில் இருந்து வெளிவரும்போது இதனை வலியுறுத்தி இருந்தார். அதிலும் துஸ் காலத்தில் நடந்த விடயங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள்.*

*அதே நேரம் கௌரவ ஜோன்சன் பெர்னாண்டோ அவர்கள் அன்றைய தினம் பிள்ளையான் அவர்கள் அரசியல் கைதி என்று கூறியிருந்தார்கள். ஆனால் அவர் அரசியல் கைதி அல்ல. மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஐயாவை சுட்டுக் கொன்றார் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டவராவார். சாஜன் ரத்னாயக்க அவர்களும் இதே மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார். இவ்வாறிருக்கையில் இன்னும் சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களுக்குரிய வழக்கும் ஒழுங்கான முறைகளில் தாக்கல் செய்யப்படவில்லை.*

*அனைவரும் அறிந்த விடயம் அதாவது கடந்த மூன்றாம் திகதி முதல் ஏழாம் திகதி வரை நடந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை-யிலான போராட்டத்தில் மிக முக்கியமாக உரைக்கப்பட்ட விடயம் அரசி-யல் கைதிகளின் விடுதலை ஆகும். அத்துடன் கடைசி யுத்தத்தில் கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோர்கள் சென்ற வருடம் முகப்புத்தகத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் படங்களை பதிவு செய்தார்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டார்கள். அதாவது அவர்கள் கடந்த இறுதி யுத்தத்தின் போது 2009 இல் பலர் இராணுவத்திடம் சரணடைந்து இருந்தார்கள். அத்துடன் இங்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பு நவம்பர் மாதம் 2020 இல் பல இளைஞர்கள் படங்களை முகப்புத்தகத்தில் பதிவிட்டார்கள் என்று கைது செய்யப்பட்டு இருந்தார்கள். இவையும் இன்னும் முறையாக வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. இதில் என்னுடைய கேள்வி எமது நாட்டில் ஏன் இரண்டு வகையான சட்டங்கள் உள்ளது? ஒரு சட்டம் ஒரு பக்கம் உள்ள மக்களுக்கும், இன்னொரு சட்டம் இன்னொரு பக்கம் உள்ள மக்களுக்கும். உங்களிடம் இதனை கேட்பதற்கான காரணம் உங்களுக்கு முழு ஆளுமையும், தகைமையும், அதி-காரமும் உள்ளது. இவை தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே உங்களிடம் நான் இக் கேள்விகளை தொடுக்கின்றேன். நீங்கள் இதனை பக்கச்சார்பற்ற முறையில் கையாண்டு அதற்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும். இது உங்களால் மாத்திரம் முடியுமே தவிர வேறு ஒருவராலும் இதனை செய்ய முடியாது. உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்ட இவ் விடயத்தை நாமும் எமது மக்களும் நூறு வீதம் நம்பி உள்ளோம் நீங்கள் செய்வீர்கள் என்று. நாங்கள் எங்கள் கட்சி சார்பாக கேட்கவில்லை. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட இலட்சக்கணக்கான மக்களின் கோரிக்கை இது. அத்தோடு இன்னும் ஈஸ்டர் குண்டு தாக்குதலோடு சம்பந்தப்பட்டவர்கள் கூட சரியான முறையில் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்னும் அவர்கள் மேல் எந்த விதமான வழக்கும் தொடரப்படவில்லை. இதில் பல அப்பாவிகளும் உள்ளனர். நான் கேட்கிற முதல் கேள்வி இவர்களுக்கு என்ன நடக்கப் போகின்றது? அதாவது இவர்கள் விடுதலை செய்யப்பட போகின்றார்களா? அல்லது எவ்வித விசாரணைகளும் இன்றி அப்படியே தான் இருக்கப் போகிறார்களா? நீங்கள் இத்தேர்தலை வென்று விட்டீர்கள். ஆனால் கொடுத்த வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லை. இதனைக் கொண்டு நீங்கள் எவற்றை சாதிக்கப்போகின்றீர்கள்? மற்றும் முன் நிறுத்தப் போகின்றீர்கள்? அவர்களை உள்ளே வைத்திருப்பது உங்கள் அரசியல் இலாபத்துக்கான திட்டமா?. அல்லது நீண்ட கால உங்கள் திட்டத்துக்காக வைத்திருக்கிறீர்களா? இதுதான் எனது கேள்வியின் முழு வடிவம் என்று எடுத்துரைத்தேன்.*

*இதற்கு பதிலளிக்கும் முகமாக நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்கள் எழுந்து பிரதமருக்கு பதிலாக தான் இதற்கான பதில் அளிப்பதாக கூறி பதில் அளிக்கத் தொடங்கினார். 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் 12,843 பேர் அரசாங்கத்திடம் சரணடைந்தார்கள். இவ்வாறு சரணடைந்தவர்களும் 600 சிறுவர் போராளிகளும் அரசாங்கத்தினால் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் கூறினார். அதிலும் அவர் குறிப்பிட்டார் பிர-தமர் மஹிந்த ராஜபக்ச்ச அவர்களின் அறிக்கையின்படி இன்றளவில் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்படவில்லை. ஆனால் தடுத்து வைக்கப்பட்டவர்கள் வழக்கானது பயங்கரவாத தடைச் சட்டத்தின் அடிப்படையில் இவர்களுக்கான தீர்ப்பு வழங்கப்பட்டு தடுக்கப்பட்டு உள்ளார்கள். இவை சம்மந்தமான தகவல்கள் அடங்கிய ஆவணத்தை சில நாட்களுக்கு முன் அவரிடம் வினா-விய பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் அவர்களுக்கு கையளித்து இருந்தார் என்றார். அதில் ஒரு பிரதியை நான் உங்களுக்குத் தருகின்றேன் என்றும் கூறினார்.*

*இவை தொடர்பான பிரச்சினைகளுக்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு இவை சம்மந்தப்பட்டவர்களோடு இரு கிழமைகளுக்கு முன்பு தாங்கள் குழு கூடி கலந்தாலோசித்ததாகவும், இதனை துரிதப்படுத்துவதற்கு உரிய அனுமதி-யை தருமாறும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியிருந்தார்.*

*நான் கூறும்போது கௌரவ நீதி அமைச்சர் இதற்கு பதில் அளித்த விதம் முரணானது என்று எடுத்துரைத்தேன். அதிலும் அவர் சமூகம் சார்ந்த ஜனாஸா பிரச்சினையையே பிரதம மந்திரி உடன் கலந்து ஆலோசித்து தீர்க்க முடியவில்லை என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி இருந்தேன்.*

*அவர் கூறியிருந்த கருத்துக்களின் படி ஒரு சிலர் முகப்புத்தகங்களில் படங்கள் மற்றும் கவி-தை எழுதியதற்காக கைது செய்யப்பட்டுள்ளார்கள். சில மாதங்களுக்கு முன்னர் அவர்கள் என்ன வகையான குற்றம் செய்தார்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்? என்று கேட்டேன்.*



*அடுத்ததாக நான் எடுத்துரைத்த விடயம் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தின் போது நான் கவனித்த மிகப்பெரிய விடயம் கிழக்கு தொடக்கம் வடக்கு வரை பல இராணுவ சாவடிகள் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அவற்றின் எண்ணிக்கையை இங்கு நான் பிரதமர் கூறியதன் அடிப்படையில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றதினால் சொல்லவில்லை. அதிலும் தற்போதுள்ள அரசாங்கத்தின் மிக முக்கியமான கொள்கைகளில் ஒன்று நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பலமடைய செய்வது ஆகும். ஆனால் இவ்வகையான பாதுகாப்பு முகாம்கள் அதிகளவில் வடகிழக்கில் மட்டும் அமைக்கப்படுவதற்கான காரணம் யாது? அதற்கான நோக்கமும் என்ன? ஏன் கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற இடங்களில் பாதுகாப்பை இப்படி பலப்படுத்தவில்லை?*

*படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகள் மற்றும் அரச காணிகள் தொடர்பாகவும் கேள்வியெழுப்பினேன். இதற்கு பதிலளித்த பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, 100 இல் 3 வீதமான காணிகள் தேசி-ய பாதுகாப்பு நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுவதாக தெரிவித்தார்.*

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE


எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை! - மக்கள் எழுச்சிப் போராட்டம் ஊடக அறிக்கை

**- மன்னார் நிருபர்** (10-02-2021)




நாங்கள் கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக எமது சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடி வருகின்றோம். தமிழராகிய நாங்கள் இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைந்த நிலப்பரப்பைத் தாயகமாகக் கொண்ட ஒரு தேசிய இனம். எங்கள் தலைவிதியைத் தீர்மானிக்கும் சகல உரிமையும் எமக்கு உள்ளது. எமது இந்தப் பிறப்புரிமையைத் தொடர்ச்சியாக மறுதலித்து எம்மை அடக்கி ஆள்வதற்கே சிறிலங்கா தேசம் விளைகின்றது. அத்துடன் சிறிலங்கா பேரினவாத அரசு தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கைத் தீவு பிரித்தானியாவின் காலனித்துவத்திலிருந்து விடுதலை அடைந்த காலம் முதல், ஈழத் தமிழர்களாகிய நாங்கள் எமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி சாத்வீக முறை போராட்டங்களை மேற்கொண்டு வந்தோம்.

இப்போராட்டங்கள் வன்முறையினூடாக அடக்கப்பட்டதினால், ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டோம். தமிழ் மக்களின் தேசிய ஆயுதப் போராட்டம் சிறிலங்கா பேரினவாத அரசினால் கொடுங்கரம் கொண்டு மிகப்பெரும் மனிதப் பேரழிப்பினூடாக முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டது.

இந்த இறுதியுத்தத்தின் போது இறுதி ஆறு மாதங்களில் மட்டும் எழுபதினாயிரத்துக்கு (70,000) மேற்பட்ட எமது உறவுகள் கொல்லப்பட்டதை ஐநா செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக்குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையில் தெரிவித்துள்ளார். கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். 2017 ஆம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது (ITJP), தமிழ்ப் பெண்கள் "பாலியல் அடிமைகளாக" கையாளப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட "பாலியல் வன்முறை முகாங்கள்" பற்றிய விபரங்களை ஐ.நா விடம் கையளித்தது. ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் 2013 சித்திரை மாதத்திற்குரிய அறிக்கைக்கு அமைவாக, தமிழர் தாயகத்தில் 90,000 க்கும் மேற்பட்ட யுத்தமுல விதவைகள் உள்ளனர். இவ்வாறு நீண்ட நெடிய காலமாக இனவழிப்புக்கு உள்ளாகிக்கொண்டிருக்கும் எமதினதிற்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

யுத்தம் நிறைவடைந்து கடந்த பதினொரு ஆண்டுகளில் வடக்கு-கிழக்கை இராணுவ மயமாக்கிவரும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் கலாசார, பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன் வடக்கு-கிழக்கு பூர்வீக குடிகளான தமிழர்களின் இனப்பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி, தமிழ்த் தேசியத்தைச் சிதைவடையச் செய்து, அவர்களது இருப்பை இல்லாமல் செய்வதற்காக பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், நிலவள திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை சிறிலங்கா அரசாங்கமானது முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகிறது.

வடக்கு-கிழக்கில் உள்ள சுமார் 200 ற்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் ஆலயங்களை கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டும், தொடர்ந்தும் அமைக்கப்படுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நில அபகரிப்புகளும், பௌத்த சிங்கள மயமாக்கல்களும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

தமிழர் தாயகம் எங்கும் நிலைகொண்டிருக்கும் சிங்கள இராணுவம் உடனடியாக அகற்றப்படுவதுடன், இயல்பு நிலை ஏற்படுத்தப்படவேண்டும். சிவில் நிர்வாகங்களில் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுத்தல் உடனடியாக நிறுத்தப்படுவதுடன் தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் உடனடியாக மாற்றப்படவேண்டும்.

மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதும், அதற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இது அவர்களின் பேச்சுரிமை, நடமாடும் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். அத்துடன் தமிழர் தரப்பில் உருவாகும் விடுதலைக்கான தன்னெழுச்சியான அரசியல் வெளியினை ஒடுக்குவதில் சிங்கள பௌத்த பேரினவாத அரசு குறியாகவே உள்ளது. இவ்வாறான அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்தும், பூர்வீக வாழ்விடங்களை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரைக் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றம் ஒன்றை உருவாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மட்டக்களப்பில் உள்ள தமிழ்ப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடன் பால் தரும் பசுக்களை திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யும் நடவடிக்கைகளும் நடந்தேறி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக தமிழ்ப் பூர்வீக நிலங்களில் வனங்கள் அழிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான தமிழரின் வாழ்வாதாரங்களை அழிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகள் உடனடியாக மீளக் கையளிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையைத் தொடர்ச்சியாக மறுதலித்து வரும் இந்த சிங்கள பௌத்த அரசானது, தமிழர்களின் நினைவுத்தூபிகள், அடையாளங்களை அழிப்பதில் முனைப்பாகச் செயல்படுகின்றது. இந்நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலரையும் கைது செய்து பல வருடங்களாகத் தடுத்து வைத்துள்ளனர். இஸ்லாமியச் சகோதரர்களையும் இதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைப் பயன்படுத்தி தற்போது தடுத்து வைக்கத் தொடங்கியுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுவதுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் யுத்த மற்றும் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

பல வருடங்களாகத் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உடனடியாக நீதி வழங்கப்படவேண்டும்.

தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட முறையில் நடைபெறும் சிங்கள அதிகாரிகளின் நியமனங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இஸ்லாமிய மக்களின் மத ரீதியான பாரம்பரிய சமய சடங்கான ஜனாசாக்களைப் புதைக்கும் செயற்பாடுகளை இல்லாமல் செய்து ஜனாசாக்களை இச்சிங்கள பௌத்த பேரினவாத அரசு எரியூட்டி வருகின்றது. இதற்கு எதிராகப் போராடும் முஸ்லீம் சமூகத்தையும் அடக்கி ஆள முனைகின்றனர். இந்நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட்டு இஸ்லாமிய மக்களின் அடிப்படை மத உரிமை மதிக்கப்பட வேண்டும்.

அத்துடன் மலையக தமிழ் மக்கள் தங்களது நாளாந்த வாழ்வாதாரத்திற்காக 1000 ரூபாய் சம்பள உயர்வு கேட்டுப் போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படுவதுடன் அவர்கள் எதிர் நோக்கும் அனைத்துப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

மேற்தரப்பட்ட அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவேண்டும் என்பதினை வலியுறுத்தி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை வடக்கு-கிழக்கு சிவில் அமைப்புகளும், தமிழ் பேசும் மக்களும் முன்னெடுத்த தன்னெழுச்சிப் போராட்டம் வலியுறுத்தி நிற்கின்றது.

அத்துடன் ஈழத் தமிழராகிய நாங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு "சிறிலங்காவை இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ. நா. பொதுச்சபை, ஐ. நா. பாதுகாப்புச்சபை போன்றவை எடுக்க வேண்டுமென்று இப்புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்த வேண்டும்" என்ற கோரிக்கையினை அனுப்பி வைத்திருந்தோம்.

அதற்குப் பிற்பாடு ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளரும் சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தும் ஆலோசனையை முன்மொழிந்துள்ளதை வரவேற்பதோடு அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வலியுறுத்திக் கோருகின்றோம்.

மேலும், தமிழ்மக்கள்மீது புரியப்பட்ட இனப்படுகொலை மீண்டும் நிகழாது இருப்பதுக்கான உத்தரவாதமாக, தமிழ்மக்கள் தமக்கான நிரந்தர அரசியல் தீர்வை வெளிப்படுத்துவதற்கான சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் பொதுசன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

மேற்படி விடயங்களை ஐக்கிய நாடுகள் சபைக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் பொருத்தமான முறையில் கொண்டுபோய்ச் சேர்ப்போம்.

சிங்கள தேசத்தில் மாறி மாறி ஆட்சியில் அமரும் அரசுகள் ஒருபோதும் எமக்கான உரிமைகளை அங்கீகரிக்கப் போவதில்லை என்ற பட்டறிவில் தான் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதியையும் தமிழர் தேசத்திக்கான அங்கீகாரத்தையும் வேண்டி நாம் போராடி வருகின்றோம். எமது நீதிக்கான போராட்டத்தினை உலகம் ஏற்கும் திசையை நோக்கி மிகத் தீவிரமாக போராட்ட அரசியலைத் தமிழ் மக்களாகிய நாம் அணிதிரண்டு நகர்த்த வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் போராடங்களுக்கு அனைவரும் வீரியமாக ஒருங்கிணைந்த செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சி போராட்டம் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றது.

# 20 திருக்குறள் சொன்னால் ஒரு லிட்டர் பெட்ரோல் இலவசம்



**த**மிழின் பெருமை நிலைக்க வேண்டும் என்பதற்காகவும், கற்றறிந்தவர்களுக்கு அடிக்கடி நினைவூட்டுவதற்காகவும் தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள சில சான்றோர்கள் போட்டிகள் நடத்துவது போல தமிழுணர்வை ஊக்குவிப்பது சில நேரங்களில் நடந்து கொண்டு தான் இருக்கிறது.

கரூரை சேர்ந்த செங்குட்டுவன் எனும் எம். காம் பட்டதாரி ஒருவர் திருக்குறள் மீதுள்ள ஆர்வத்தால் ஏற்கனவே, வள்ளுவர் உணவகம், வள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வள்ளுவர் பெட்ரோல் பங்கு ஆகியவற்றை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், தனது பெட்ரோல் பங்கில் போட்டி ஒன்றை நடத்துகிறார். அதாவது, 20 திருக்குறளை கூறுபவர்களுக்கு 1 லிட்டர் பெட்ரோல் இலவசம். இவரது இந்த செயலால் கரூர் - மதுரை பைபாஸ் சாலையில் உள்ள அவரது வள்ளுவர் பெட்ரோல் பங்கில் கூட்டம் அலைமோதுகிறது.

இந்த திருக்குறள் திட்டம் குறித்து அவர் கூறுகையில், மாணவர்களிடம் தமிழ் வாசிப்பதும், பேசுவதும் குறைந்து வருகிறது. மக்களிடையே திருக்குறளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த இலவச பெட்ரோல் திட்டம் அறிவிக்கப்பட்டது' எனத் தெரிவித்தார்.

தமிழர் திருநாளான கடந்த ஜனவரி 14ஆம் தேதி தொடங்கிய இந்தத்திட்டம் ஏப்ரல் 30 வரை அமலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் படித்தால் என்ன கிடைக்கும் என்று கேலி பேசுவோருக்கு மத்தியில் தமிழ் படிப்பவர்களை ஊக்கப்படுத்தும்வகையில், பெட்ரோல் விலை லிட்டர் 90 ரூபாய்க்கு விற்கும்போது, இப்படியும் சிந்திக்கும் கரூர் செங்குட்டுவன் பாராட்டுதலுக்கு உரியவரே!

**- மணிராஜ் (திருநெல்வேலி)**

# ஏப்ரல் இறுதியில் தமிழக சட்டப்பேரவைக்கு தேர்தல்?



அதிமுக, பாஜக கட்சிகளின் வலியுறுத்தல் மற்றும் விடுமுறை தினங்கள் அடிப்படையில் ஏப்ரல் இறுதி வாரத்தில் தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

தமிழகத்தில் தற்போதுள்ள 15வது சட்டப்பேரவையின் பதவிக்காலம் வரும் மே மாதம் முடிவடைகிறது. இதை யடுத்து சட்டப்பேரவை பொதுத் தேர்தலை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. வாக்குச் சாவடிகள் அதிகரிப்பு பணிகள், வாக்குப்பதிவு இயந்திரங்கள் வரவழைப்பு மற்றும் சரிபார்ப்பு பணிகள் வாக்குச் சாவடிகளில் தேவையான வசதிகள் உருவாக்கம் என அனைத்து விதமான பணிகளையும் முடித்துவிட்ட தேர்தல் ஆணையம், மாநிலத்தில் உள்ளூர் விடுமுறை, மாநில விடுமுறை தினங்கள் குறித்த தகவல்களை தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் கேட்டது.

அவரும், மாவட்ட தேர்தல் அதிகாரி களிடம் தகவல்களை கேட்டு, அவற்றை தொகுத்து தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பியுள்ளார்.

இதுதவிர, தற்போது தமிழகம் வந்துள்ள தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா தலைமையிலான குழுவினர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்துள்ளனர். அப்போது, அனைத்து கட்சிகளும் ஒரே கட்டமாக ஒரே நாளில் தமிழக சட்டப்பேரவை தேர்தலை நடத்த கோரிக்கை விடுத்துள்ளன.அதிமுக சார்பில், கடந்த முறை மே மாதம் அதிகளவில் வெப்பம் இருந்ததால் வாக்காளர்கள் வாக்களிக்க சிரமப்பட்டனர்.

எனவே, இந்த முறை ஏப்ரல் இறுதி வாரத்தில் தேர்தலை நடத்த வேண்டும். அப்போதும் வாக்காளர்களுக்கு தேவையான நிழல், குடிநீர் வசதிகளை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.பாஜகவோ, ஏப்ரல் மாதத்தில் தமிழக மக்கள் கொண்டாடும் தமிழ்ப்புத்தாண்டு தினத்தை ஒட்டி தேர்தலை அறிவிக்க வேண்டாம். அதன்பின்பாக தேர்தல் நடத்தும் வகையில் தேதியை இறுதி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. திமுகவோ எப்போது தேர்தல் நடந்தாலும் நாங்கள் தயாராக உள்ளோம் என்று தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகளின் கோரிக்கை, மாநில தேர்தல் அதிகாரியின் அறிக்கை ஆகியவற்றை பரிசீலித்து, ஏப்ரல் இறுதி வாரத்தை பொறுத்தவரை பெரும்பாலும் எந்த நிகழ்வுகளும் இல்லாத சூழலில், அதில் ஒருநாள் தேர்தல் தேதியாக தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளதாக தேர்தல் ஆணையம் தரப்பில் கூறப்படுகிறது. மேலும், தேர்தல் தொடர்பான அறிவிப்பும் இம்மாத இறுதி அல்லது மார்ச் முதல் வாரத்தில் வெளியாகும் என கூறப்படுகிறது.

## மக்கள் நீதி மய்யத்தின் நிரந்தர தலைவரானார் கமல்ஹாசன்: முதல்வர் வேட்பாளராகவும் பொதுக்குழு தீர்மானம்



மக்கள் நீதி மய்யத்தின் நிரந்தர தலைவராக கமல்ஹாசனை நியமித்து பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. முதல்வர் வேட்பாளராகவும் அவரை அறிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மக்கள் நீதி மய்யம் கட்சியைக் கடந்த 2017 ம் ஆண்டு கமல்ஹாசன் தொடங்கினார். அதன் தலைவராக கமல்ஹாசன் இருந்து வருகிறார்.

மக்கள் நீதி மய்யம் தொடங்கப்பட்ட சில ஆண்டுகளில் 2019ம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நடந்தது. அதில் மக்கள் நீதி மய்யம் சில தொகுதிகளில் 1 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளும், சில தொகுதிகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளும் பெற்று அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

## தை அமாவாசை: ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத்தில் பல்லாயிரக்கணக்கானோர் வழிபாடு



தை அமாவாசை நாளான இன்று மறைந்த தங்களது முன்னோர்களுக்கு, பொதுமக்கள் நீர்நிலைகளில் தர்ப்பணம் செய்து வழிபட்டனர். மறைந்த முன்னோர்களுக்கு மகாளய அமாவாசை, ஆடி அமாவாசை, தை அமாவாசை ஆகிய நாட்களில் நீர்நிலைகளில் தர்ப்பணம் கொடுப்பது இந்து மக்களின் வழக்கம். இந்த நிகழ்வுகளுக்குத் திருச்சியைப் பொறுத்தவரை ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் படித்துறை பிரத்யேக இடமாக விளங்கி வருகிறது. இந்த நாட்களில் இங்கு பல ஆயிரக்கணக்கானோர் திரள்வர்.

இதன்படி, தை அமாவாசை நாளான இன்று திருச்சியில் காவிரிக் கரையான அம்மா மண்டபம், கருட மண்டபம் உள்ளிட்ட படித்துறைகளிலும், கொள்ளிட ஆற்றங்கரைகளில் உள்ள படித்துறைகளிலும் ஏராளமான பொதுமக்கள் மறைந்த தங்கள் முன்னோர்களுக்குத் தர்ப்பணம் அளித்தனர். காவிரியாற்றில் குறைந்த அளவே தண்ணீர் ஓடியதால், பெரும்பாலோனோர் ஆற்றுக்குள் இறங்கி மணல் திட்டுகளில் அமர்ந்து தர்ப்பணம் கொடுத்தனர். தொடர்ந்து, பிண்டங்களைத் தண்ணீரில் கரைத்துவிட்டு, புனித நீராடிவிட்டு கோயில்களுக்குப் புறப்பட்டனர். மேலும், படித்துறைகளில் காத்திருந்த ஏழை, எளியோருக்கு உணவுப் பொட்டலங்கள் மற்றும் காணிக்கைகளை வழங்கினர்.

தை அமாவாசையை ஒட்டி, அம்மா மண்டபம் உட்பட காவிரி படித்துறை பகுதிகளில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அம்மா மண்டபத்தில் சேரும் வாழை இலை, பிளாஸ்டிக் பைகள் உள்ளிட்ட கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அகற்றும் பணியில் மாநகராட்சித் துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபட்டனர். தீயணைப்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். போலீஸார் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

வீணாகிய உணவுப் பொட்டலங்கள்..

பொதுமக்கள் தர்ப்பணம் கொடுத்துவிட்டு கோயில் அல்லது வீட்டுக்குப் புறப்படும் முன்பு ஏழை, எளியோருக்கு அன்னதானம் அளித்துச் செல்வது வழக்கம். இதன்படி, அம்மா மண்டபம் பகுதியில் அமர்ந்திருந்த ஆதரவற்றவர்களுக்குப் பலரும் உணவுப் பொட்டலங்களை வழங்கினர். தேவைக்கு அதிகமாக உணவுப் பொட்டலங்கள் குவிந்ததால், அவற்றை ஆதரவற்றவர்கள் குப்பைத் தொட்டியில் வீசிச் சென்றனர்.

## அரசியல் கட்சிகளின் கொடிகள் தயாரிக்கும் பணி விறுவிறுப்பு




தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தை தொடங்கிவிட்டன. இதைத்தொடர்ந்து கட்சிக் கொடிகள் தயாரிப்புப் பணி கோவையில் தீவிரமடைந்துள்ளது.கோவையில் டவுன்ஹால், காந்திபுரம், பீளமேடு, சிங்காநல்லூர் உள்ளிட்ட இடங்களில் கொடிகள் தயாரிப்புப் பணி நடக்கிறது. டவுன்ஹால் பகுதியில் உள்ள ஒரு விற்பனையகத்தில், கொடிகள் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ராஜேந்திரன் என்பவர் செய்தியாளரிடம் கூறியதாவது :

காட்டன், மைக்ரோ கிளாத், வெல்வெட், பாலியஸ்டர் ஆகிய துணி வகைகளைக் கொண்டு, 8க்கு 10 அங்குலம் முதல் 40க்கு 60 அங்குலம் வரை பல்வேறு அளவுகளில் கொடிகள் தயாரிக்கிறோம். திமுக, அதிமுக, பாஜக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட், அமமுக, தேமுதிக, பாமக உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் கொடிகளும் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இதில் சராசரி அளவான 20 க்கு 30 அங்குலம் அளவுள்ள கொடியைத் தான் அதிகளவில் ஆர்டர் கொடுத்து வாங்குகின்றனர்.

மொத்தமாக துணி வாங்கி, அரசியல் கட்சியின் கொடியை வடிவமைத்து, துணியில் அச்சேற்றுகிறோம். பின்னர், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தையல் தொழிலாளர்களுக்கு சுழற்சி முறையில் கொடுக்கிறோம். அவர்கள் அக்கொடிகளுக்கு ஓரம் அடித்து, கட்டுவதற்கு ஏற்ப காது பகுதிகளை வைத்து தைத்து எங்களிடம் ஒப்படைக்கின்றனர். கோவை மட்டுமின்றி, திருச்சி, நாமக்கல், சேலம், கரூர், மதுரை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரியில் இருந்தும் ஆர்டர் கொடுத்து, கொடியை பெற்றுச் செல்கின்றனர்.ஒரு நாளைக்கு சராசரியாக 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் கொடிகளை தயாரிக்கிறோம். தற்போது வரை ஏறத்தாழ 50 ஆயிரத்துக்கும் அதிகமான கொடிகளை தயாரித்து வைத்துள்ளோம். கரோனா ஊரடங்கால் வாழ்வாதாரம் இழந்து தவித்தவர்களுக்கு, கட்சிக் கொடிகள் தயாரிப்புப் பணி கைகொடுத்து உதவுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## நடிகர் சிவாஜி கணேசனின் மூத்த மகன் ராம்குமார் தமிழக பா.ஜ.க. தலைவர் எல்.முருகன் முன்னிலையில் பா.ஜ.க.வில் இணைந்தார்



மறைந்த நடிகர் சிவாஜி கணேசனின் மூத்த மகனும், திரைப்பட தயாரிப்பாளருமான ராம்குமார் மற்றும் அவரது மகன் துஷ்யந்தும், சென்னை தியாகராயநகரில் உள்ள தமிழக பா.ஜ.க. தலைமை அலுவலகமான கமலாலயத்தில், தமிழக பா.ஜ.க. தலைவர் எல்.முருகன், மேலிட பொறுப்பாளர் சி.டி.ரவி ஆகியோர் முன்னிலையில் பா.ஜ.கவில் இணைந்தனர்.

முன்னதாக தமிழக பா.ஜ.க. தலைமை அலுவலகமான கமலாலயத்துக்கு நேற்று வந்த ராம்குமார் மற்றும் அவரது மகனும், நடிகருமான துஷ்யந்தும் தமிழக பா.ஜ.க. தலைவர் எல்.முருகனை சந்தித்து பேசினர். பின்னர் ராம்குமார் நிருபர்களிடம் கூறுகையில், 'நான் பா.ஜ.க.வில் இணைய உள்ளேன். அதற்கு வலிமையான மனிதராக இருக்கும் பிரதமர் நரேந்திர மோடி தான் காரணம். நான் பா.ஜ.க.வில் இணைந்து மக்களுக்கு நல்லது செய்வேன்.' என்று கூறியிருந்தார்.

# இலங்கை அரசை சர்வதேசக் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு கனேடிய அரசிடம் கோரும் வாகனப் பேரணி




ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் இணைத்தலைமை நாடுகளில் ஒன்றாக கனடா இருப்பதனால் தமிழ் மக்கள் சார்ந்து குரல் கொடுப்பதற்கான தார்மீகக் கடமை கனடாவிற்கு இருக்கிறது என்பதை வலியுறுத்தியே இந்த வாகனப் பேரணி இடம்பெற இருக்கின்றது.

ஜனவரி 27 அன்று வெளிவந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கையில் இடம்பெற்றிருக்கும் பரிந்துரைகளை இணைத்தலைமை நாடுகள் ஊடாகத் தீர்மானம் ஒன்றில் வரைவாக கொண்டுவருமாறு கனேடிய அரசை கனேடியத் தமிழர் சமூகம் வலியுறுத்தி நிற்கின்றது.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைப்படி சிறீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் பந்தியை உள்ளடக்கிய தீர்மான வரைவினை இணைத்தலைமை நாடுகளுடன் இணைந்து தயாரிக்குமாறு கனடிய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் முகமாகவே இந்த வாகனப் பேரணி நடைபெற இருக்கிறது.

இந்த வாகனப் பேரணியில் போதிய அளவு தமிழ் மக்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு கனேடிய அரசிற்கு கொடுக்கப்படும் அழுத்தங்களின் இன்னுமொரு வடிவமாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஆணையாளரின் பரிந்துரைகள் அனைத்தையும் தீர்மான வரைபில் உள்ளடக்குமாறு கோரி கனேடிய வெளிவிவகார அமைச்சருக்கு இணையவழி மனு ஒன்றும்-மனுக்களுக்கான கனேடிய அரசாங்க இணையப்பக்கத்தில் பொதுமக்கள் கையொப்பத்திற்காக தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவிற்கான இலக்கம் E-3168 ஆகும்.

இந்த மனுவை நீங்கள் கையெழுத்திட்டவுடன் மனுவில் நீங்கள் தான் கையொப்பம் இட்டீர்கள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், அதி கூடிய பட்சம் ஐந்து நிமிடங்களுக்குள் நோ ரிப்ளை (No Reply) எனும் முகவரியிலிருந்து உங்கள் மின்னஞ்சலுக்கு ஒரு மின்னஞ்சல் வந்து சேரும்.

அந்த மின்னஞ்சலில் "இந்த மனுவை பூர்த்தி செய்வதற்கு உங்கள் ஆதரவை உறுதிப்படுத்துங்கள்" என்ற வாசகங்கள் அமைந்த இணைப்பினை நீங்கள் அழுத்தினால் நீங்கள் இட்ட கையொப்பம் கணக்கில் சேர்க்கப்படும். ஆகவே, இதனை கருத்தில் கொண்டு நீங்கள் மனுவில் கையெழுத்திட்டதோடு, என் கடமை முடிந்து விட்டது என இருந்து விடாமல் உங்கள் மின்னஞ்சலைத் திறந்து அந்த இணைப்பினை அழுத்தி உங்கள் கையொப்பத்தை உறுதிப்படுத்துங்கள்.

மனுவிற்கு ஆதரவான கையொப்ப எண்ணிக்கை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு, எமது அழுத்தம் கனடிய நாடாளுமன்றத்தில் பிரதிபலிப்பதுடன் நம் இனத்தின் குரலும் ஓங்கி ஒலிக்கும். ஆகவே இதனைத் தாயகத்திற்கான உங்கள் தலையாய கடமையாக நினைத்து செயற்படுமாறு ஏற்பாட்டாளர்கள் அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக் கொள்கின்றனர்.

மனுவின் இணையப்பக்கத்தின் இணைப்பு.

https://petitions.ourcommons.ca/en/Petition/Details?Petition=e-3168

**வாகனப் பேரணி பற்றிய விபரம்**
**காலம்: புதன்கிழமை, பெப்ரவரி 17, 2021**

**ரொறன்ரோவிலிருந்து காலை 7:30 மணிக்கு,** Markham & Steeles **சந்திப்பில் கூடி காலை 8 மணிக்கு வாகனப் பேரணி ஆரம்பமாகும்.**

**மொன்றியலிலிருந்து காலை 10:30 மணிக்கு வாகனப் பேரணி முருகன் கோவிலில் இருந்து ஆரம்பமாகும்.**

**ரொறன்ரோ மொன்றியல் பேரணிகள் இரண்டும் பிற்பகல் 1 மணிக்கு ஒட்டாவா வின்சன்ற் மசே பூங்காவில் சந்தித்த பின் பிற்பகல் 1:30 மணிக்கு நாடளுமன்றம் நோக்கி நகரும்.**

**தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| **மகாஜெயம்** | **- (647) 262-5587** |
| **மரியராசா** | **- (416) 669-6437** |
| **றெஜி (மொன்றியல்)** | **- (514) 651-1419** |
| **றோய்** | **- (416) 457-1633** |

# மன்னார் மாவட்டத்தில் 3 ஆவது கொரோனா மரணம்

மன்னார் மாவட்டத்தில் 3 ஆவது கொரோனா மரணம் இன்றைய தினம் (11) நிகழ்ந்துள்ளது. முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 73 வயதுடைய வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பீ.சி. ஆர். பரிசோதனையின் போது கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த மூவருக்கு இன்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் முசலிப் பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதேவேளை,எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த கர்ப்பவதி தாயார் ஒருவர் கொரோனா அறிகுறிகளுடன் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதுபோல நோய் அறிகுறியுடன் வைத்தியசாலைக்குச் சென்ற ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**- மன்னார் நிருபர் (11/02/2021)**

# தமிழகத்தில் நலிந்து வரும் கரும்பு உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசை வலியுறுத்துகிறார் வேல்முருகன்



கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, நாகை ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் கரும்பு பயிரிடப்படுகிறது. மகசூலில் போதிய வருவாய் கிடைக்காததாலும், சர்க்கரை ஆலைகளின் நிலுவைத் தொகை அலைக்கழிப்பாலும், கரும்பு சாகுபடியை கைவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் கரும்பு பயிரிடும் பரப்பளவு குறைந்து வருவதால், சர்க்கரை ஆலைகள் மூடப்படுகிறது. விவசாயிகள் மட்டுமல்லாது இதனை நம்பியுள்ள தொழிலாளர்கள் பலரும் வேலையிழந்து வருகின்றனர். தமிழகம் 42, புதுச்சேரியில் 2 என 44 சர்க்கரை ஆலைகளில், கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் சுமார் ரூ.1000 கோடி நிலுவைத்தொகை உள்ளது. இவற்றில் 10 ஆலைகள் மூடப்பட்டு விட்டன. மூடிய இந்த ஆலைகளும் கோடிக்கான ரூபாய்களை வழங்காமல் உள்ளன. இதன் காரணமாக, விவசாயம் செய்ய முடியாமலும், மருத்துவச் செலவு, குடும்பச் செலவுகளை செய்ய முடியாமலும் கந்துவட்டிக்கு பணம் வாங்கி விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே, கரும்பு பயிரிடுவதை விவசாயிகள் மீண்டும் தொடங்கவும், கடனில் தவிக்கும் சாக்கரை ஆலைகளை மீட்கவும், மத்திய, மாநில அரசுகள் முன் வர வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற கரும்புக்கு நியாயமான விலையை நிர்ணயிக்க மத்திய அரசு முன் வர வேண்டும். கரும்பிலிருந்து சர்க்கரை மட்டும் பிரதானமாக எடுப்பதோடு அல்லாமல் அதிலிருந்து எத்தனால் எடுப்பதையும் ஊக்கப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்க்கரை ஆலைகளுக்கு அதற்கான அனுமதியை வழங்க வேண்டும். அதே நேரத்தில், எத்தனாலை மது உற்பத்திக்கு பயன்படுத்தாமல், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் எத்தனால் கலந்த எரிவாயுவை வாகனங்களுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமின்றி, சர்க்கரை ஆலைகள் புத்துயிர் பெறுவதுடன், கரும்பு உற்பத்தியையும் மீண்டும் அதிகரிக்க முடியும். சர்க்கரை ஆலைகளும் தொடர்ந்து இயங்க முடியும். மின்சாரம் உற்பத்தி செய்யலாம். வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும். அரசு நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு பெட்ரோலிய இறக்குமதியை குறைக்க முடியும். இதன் மூலமாக, பெட்ரோல் விலை உயர்வு பன்மடங்கு குறைக்க முடியும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, சர்க்கரை ஆலைகளில் எத்தனால் தயாரிக்கும் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

# இலங்கை அரசின் போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களோடு தோளோடு தோள் நிற்க பிரம்டன் நகர சபை தயாராக உள்ளது

## மேயர் பெற்றிக் பிரவுன் உறுதியாகத் தெரிவிப்பு

"இலங்கை அரசு அரங்கேற்றிய கொடிய போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களோடு தோளோடு தோள் நின்று ஆதரவு வழங்க கனடாவின் பிரம்டன் நகர சபை எப்போது தயாராக உள்ளது. இங்கு வாழும் தமிழ் மக்கள் ஒரு வளமான சமூகமாக உள்ளது. கனடிய நீரோட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் தமிழ்ச் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வது எமது கடமை என்பதை நாம் உணர்கின்றோம்.

இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கு முக்கிய அடையாளமாக விளங்கும் முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் நினைவாக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டிருந்த "நினைவுத் தூபியை இலங்கை அரசும் இராணுவமும் தமது கையாட்களைக் கொண்டு தகர்த்தெறிந்தது.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்களால் இந்த இன அழிப்பையும் அதன் பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டதையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே தான் எமது பிரம்டன் நகரசபை எல்லைக்குள் கனடாவில் நாமும் ஒரு "முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை நிறுவ உள்ளோம். இதற்காக எமது நகரசபையின் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் ஆதரவை வழங்கி எமது சபையில் இந்தத் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது."




இவ்வாறு தெரிவித்தார் பிரம்டன் நகரசபையின் நகர பிதாவும் தமிழ் மக்களின் நல்லாதரவைப் பெற்றவருமான மரியாதைக்குரிய பெற்றிக் பிரவுண் அவர்கள். நேற்று முன்தினம் புதன்கிழமை இணையவழி ஊடாகவும் தொலைபேசி வாயிலாகவும் பிரம்டன் நகரசபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பத்திரிகையாளர் சந்திப்பில் உதயன் பிரதம ஆசிரியரிடம் தெரிவித்தார்.

பிரம்டன் மாநகரசபையானது தற்போதைய கோவிட்-19 தொற்று தொடர்பாக எடுத்துவரும் சுகாதார நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசி செலுத்துதல் ஆகியவை தொடர்பாக நகர பிதா பல்லின ஊடகங்களைச் சந்தித்து விளக்கமளித்தார்.

அப்போது பிரம்டன் நகர சபை எல்லைக்குள் தடுப்பூசி விநியோகம் மற்றும் தடுப்பூசி செலுத்துதல் ஆகியவற்றின் விபரங்கள் தொடர்பாக கேள்வியொன்றை முன்வைத்த உதயன் பிரதம ஆசிரியரிடம் அதற்குரிய பதிலை வழங்கிய பின்னர் நகர பிதா அவர்கள் தொடர்ந்து பிரம்டன் நகரசபை எல்லைக்குள் நிறுவப்படவுள்ள "முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி" தொடர்பாகவும் உரையாடத் தொடங்கினார்.




அவர் இந்த விடயம் தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள தொடங்கியபோது, "இந்த பத்திரிகையாளர் சந்திப்பானது, கோவிட்-19 தொடர்பானதாக இருந்தாலும் தமிழச் சமூகம் தொடர்பான எனது கருத்துக்களைக் கூறுவதற்கு நான் விரும்புவதற்கு காரணம், தமிழ்ச் சமூகத்தின் வலிகளையும் தமது தாயகத்தில் அவர்கள் அனுபவித்த கொடுமைகளையும் நான் நன்கு உணர்ந்துள்ளேன். அதற்கு மேலாக எமது பிரம்டன் மாநகர சபையில் எல்லைக்குள் வாழும் தமிழ் மக்களின் சிறப்புக்களை நான் நேரில் கண்டுள்ளேன். அவர்களின் வலிகளை நாம் எமது வலிகளாகவே பார்க்கின்றோம்.

எனவே தான் எமது மாநகர சபை எல்லைக்குள் உள்ள சபையின் பூங்கா ஒன்றில் "முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி" எழுந்து நிற்கப்போகின்றது. எனவே இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கி இந்த திட்டத்தை முன்மொழிந்த எமது பிரதேச அங்கத்தவர் **Martin Medeiros** அவர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்." என்றார்.'.


தொடர்ந்து பெற்றிக் பிரவுண் அவர்கள் பிரம்டன் மாநகரில் "முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை நிறுவ வேண்டும் என்ற தமிழ் மக்களின் வேண்டுகோளை ஏற்று செயற்பட்ட பிரம்டன் பிராந்திய சபையின் 3ம் மற்றும் 4ம் வட்டாரங்களின் உறுப்பினர் திரு **Martin Medeiros** ஒலிவாங்கியின் முன்பாக வந்து தனது செயற்பாடுகளைப் பற்றி விளக்கமளித்தார்.

அப்போது அவர் பேசுகையில்" எமது பிரம்டன் நகரசபையினால் எடுக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி நிறுவும் பணியைப் பாராட்டி ஐரோப்பிய நாடுகளிலும், மற்றும் அமெரிக்கா, இந்தியா,ஆஸ்த்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தும், இலங்கையிலிருந்தும் பாராடடுக்கள் கிடைத்துள்ளன. இதனால் எமது நகரசபை பிதா அவர்களும் ஏனைய சபை அங்கத்தவர்களும் உத்தியோகத்தர்களும் மிகவும் உற்சாகம் அடைந்துள்ளோம். அத்துடன் நாம் அனைவரும் பல நகரசபைகளோடு தொடர்பு கொண்டு அந்தந்த சபைகளின் எல்லைக்குள்ளும் தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைக்களுக்கு சான்றாக விளங்கும் "முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை" நிறுவும் வண்ணம் வேண்டுகோள் விடுத்து வருகின்றோம். பல சபை அங்கத்தவர்கள் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் உங்கள் பத்திரிகை வாயிலாக பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்" என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார். தொடர்ந்து உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் அவர்கள் இருவருக்கும் நன்றி தெரிவித்தார்.



# "தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் உறவுகளின் நலன்கள் தொடர்பாக இணக்கமுள்ள ஏனைய அரசியல் தலைவர்களோடு இணைந்து செயற்படுவேன்"

## 'ரொரன்ரோ மனித நேயக் குரல்' நடத்திய கருத்தரங்கில் தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவிப்பு





"தமிழ்நாட்டில் நாற்பது வருடங்களுக்கு மேலாக குடியுரிமை அந்தஸ்த்து எதுவுமின்றி எதிர்பார்ப்புக்களுடன் காத்திருக்கும் ஈழத் தமிழ் உறவுகளின் நலனில் எமது கட்சி கடந்த பல ஆண்டுகளாக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றது. அவ்வாறு எமது மண்ணில் உள்ள ஈழத்தமிழ் உறவுகளின் நலன்கள் தொடர்பாக நான் பல தலைவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகி-யோரோடு பேசி வருகின்றேன். எனினும் இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டில்இணக்கமுள்ள ஏனையஅரசியல் தலைவர்களோடு இணைந்து செயற்படுவேன்"

இவ்வாறு, கனடாவில் இயங்கிவரும் "ரொரன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பு, கடந்த 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடத்திய இணையவழிக் கருத்தரங்கில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் உற்சாகத்துடன் தெரிவித்தார்.

மேற்படி இணையவழிக் கருத்தரங்கில் முக்கிய கருப்பொருட்களாக எடுத்துக்கொள்ளப்பட்டவை இரண்டு விடயங்களாகும். முதலாவது விடயமாக, இலங்கைக் கடற்படையினரால் தொடர்ச்சியாக துன்புறுத்தப்பட்டு வரும் தமிழக மற்றும் இலங்கைத் தமிழ் மீனவர்களின் பிரச்சனைகளை எவ்வாறு அணுகுவது என்பதாகும். இரண்டாவது விடயம், கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக தமிழ்நாட்டில் அகதிகள் என்று பெயரோடு எவ்வித சலுகைகளோ அன்றி உரிமை-களோ இன்றி தவிக்கும் ஈழத்து தமிழ் உறவுகளின் எதிர்காலம். ஆகியனவாகும்.

மேற்படி கருத்தரங்கை ரொரன்ரோவின் மனிதநேயக் குரல் அமைப்பின் தலைவர் ஆர். என். லோகேந்திரலிங்கம் தொகுத்து வழங்கினார். முதலில் நாடு கடந்த தமி-ழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய அங்ககத்தவருமான திரு நிமால் விநாயகமூர்த்தி சிறப்பரையாற்றினார். அவர் தனது உரையில் அன்றைய கருத்தரங்கில் எடுத்துக்கொள்ளப்பட்ட விடயங்கள் இரண்டும் இந்திய மத்திய அரசோடு சம்பந்தப்பட்ட அம்சங்கள் என்றும், எனவே இந்திய மத்திய அரசோ-டு பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய சாதகமான நிலையொன்றை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அக்கறையுடன் செயற்படவேண்டும் என்றும். தமிழ்நாட்டுத் தலைவர்களின் ஈழ மக்கள் மீது அக்கறைகொண்டு குரல் கொடுத்துவருகின்ற குறிப்பிட்ட தலைவர்களை எமது மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக தீவிரமாக கவனமெடுக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று குறிபிட்டார்.

அடுத்து கனடா வாழ் அரசியல் செயற்பாட்டாளரும், தமிழத் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினருமான நக்கீரன் தங்கவேல் சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில் தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் நெடுமாறன், சீமான் வைகோ ஆகியோர் வரிசையில் தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் அவர்களும் முக்கிய பங்குவகிக்கின்றார் என்றும். கடந்த காலங்களின் அவரது உரைகளையும் செயற்பாடுகளையும் நன்கு கவனித்தவன் என்ற வகையில் அவரது உரையையும் கேட்பதற்கு தான் ஆர்வத்துடன் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பிரதான உரையாற்ற திரு வேல்முருகன் அழைக்கப்பெற்றார்.

அவர் முதலில் தன்னை இந்த கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்ய சென்னை நண்பன் இணையத்தள அலுவலகத்தின் பொறுப்பாளருக்கும் கனடாவில் இயங்கிவரும் ரொரன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் பிரதான உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, தான் தினந்தோறும் மனதில் நிறுத்தி அக்கறை □கொள்கின்ற அல்லது இலங்கை இந்திய அரசுகளின் மீது ஆத்திரம் மேலிட்டு உணர்ச்சிவசப்படுகின்ற விடயங்கள் இங்கு அலசி ஆராயப்படவுள்ளது தனது உற்சாகம் அளிப்பதாகக் கூறி, பல விடயங்களை எத்துதரைத்தார்.

தொடர்ந்து இலங்கையைச் சேர்ந்த பத்திரிகையாளர் முருகையா இந்திரஜித், தமிழ்நாடு "புதிய தலைமுறை தொலைக்காட்சியின் முக்கிய செய்தியாளர் திரு ஜோதி நரசிம்மன், கனடா மொன்றியால் நகர் வாழ் வீணைமைந்தன் சண்முகராஜா ஆகியோர்க்கு தங்கள் கருத்துக்களை கூறுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் அனைவரதும் கருத்துப்பகிர்வின் போது, அன்று பேச எடுத்துக்கொள்ளப்பட்ட இரண்டு தலைப்புக்கள் தொடர்பாகவும் ஆணித்தரமான கருத்துக்களை எடுத்துரைத்து திரு வேல்முருகனிடமும் சில கேள்விகளை முன்வைத்தனர். அங்கு கலந்து கொண்ட பலரும் கேள்விகளை முன்வைத்தனர்.இறுதியில் ரொரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் செயலா-ளரும் நாடு கடந்த அரசாங்கத்தின் உறுப்பினருமான மரியராசா மரியாம்பிள்ளை நன்றியுரையோடு தனது கருத்துக்களையும் முன்வைத்தார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலய 04 மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்த 04 மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வானது 09-02-2021 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்றது. இதற்கான நிதி அனுசரனையினை **Ratnam foundation** மற்றும் சித்தன்கேணி - கனடா ஒன்றியம் என்பன வழங்கியிருந்ததோடு அதன் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்வில் மாணவர்களுக்கு பணப்பரிசில்கள் மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.








# 20 வருடங்களுக்கு பிறகு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் இயக்குநர் விஜய் மில்டனின் "கொலுசுகள் பேசக்கூடும்"


தமிழ் சினிமாவில் ஒளிப்பதிவு துறையில் அறிமுகமாகி, தனிமுத்திரை பதித்து வெற்றி பெற்றவர் விஜய் மில்டன். இயக்குநராக கோலி சோடா, கடுகு என தரமான படங்கள் தந்து, சிறந்த இயக்குநர்களின் வரிசையிலும் இடம் பெற்றிருக்கிறார். இப்பொழுது கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ்குமாரை வைத்து புதிய படமொன்றை இயக்கி வருகிறார். இவர் எழுதிய "கொலுசுகள் பேசக்கூடும்" எனும் காதல் கவிதைகள் அடங்கிய தொகுப்பு, 20 வருடங்களுக்கு பிறகு **Anklets do speak of love** என கிரி' வேணுகோபால் என்பவரால் ஆங்கிலத்தில் மொ-ழி பெயர்க்கப்பட்டுள்ளது. வரும் பிப்ரவரி 14 காதலர் தினத்தன்று இந்த ஆங்கில மொழியாக்க கவிதை தொகுப்பை பிரபல இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் வெளியிடுகிறார்.

இது குறித்து இயக்குநர் விஜய் மில்டன் கூறியதாவது.

2000 ஆம் ஆண்டு வெளியான புத்தகம் தான் **"**கொலுசுகள் பேசக்கூடும்**"**. 1998 - க்கு முன்பிருந்தே அவ்வப்போது நான் எழுதிய கவிதைகளை, அண்ணன் அறிவுமதி வாசிப்பார். அவருக்கு பிடித்துப்போய் ஆனந்த விகடனுக்கு அனுப்பி வைத்தார். ஆனந்த விகடனில் ஒரு புத்தகம் முழுதும் அங்கங்கே எனது கவிதைகள் வெளியானது. பின்னர் அதனை முழுப்புத்தகமாக்கியபின், 2000 பிப்ரவரி 14 அன்று கவிக்கோ அப்துல் ரகுமான் புத்தகத்தினை வெளியிட்டார். அதன் பின் பல பதிப்புகள் வெளியிடப்பட்டு ரசிகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. சமீபத்தில் துபாயில் சுது வாக வேலை பார்க்கும் கிரி' வேணுகோபால் இந்த புத்தகத்தை படித்துவிட்டு, என்னை தொடர்பு கொண்டார். அவர் ஒரு எழுத்தாளரும் கூட, இந்த புத்தகம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஆசைப்பட்டு என்னை அணுகினார். அவரின் அன்புக்காக சம்மதித்தேன். அவரது சொந்த முயற்சியில் இபுத்தகத்தை மிக அருமையாக ஆங்கிலதில் மொழிபெயர்த்துள்ளார். தற்போது அவரது முயற்சியில் ஆங்கில புத்தகமாக வருகிறது. 20 வருடங்கள் ஆகியும் ஒரு படைப்பு வாசிக்கப்படுவதும், இத்தனை தூரம் பாரட்டப்படுவதும் மனதிற்கு பெரும் மகிழ்ச்சியை தருகிறது. இப்புத்தகத்தை வெளியிட மிக சரியான நபர் யாரென தேடியபோது, நண்பர் கௌதம் மேனன் ஞாபகத்துக்கு வந்தார். அவரும் அன்புடன் ஒப்புக்கொண்டார். தமிழ் பதிப்பு வெளியான அதே காதலர் தினத்தில் ஆங்கில பதிப்பும் வெ-ளியாவது மேலும் மகிழ்ச்சி. La liberta நிறுவ-னம் இப்புத்தகத்தின் அச்சுப்பிரதியை தயாரித்து வெளியிடுகிறார்கள். இப்புத்தகத்தின் வெளியீட்டு விழா 14 பிப்ரவரி 2021 அன்று காலை 9.30 லிருந்து 10 மணிக்குள் நடைபெ-றுகிறது. ரசிகர்கள் அனைவரும் இவ்விழாவினை குயஉநடிழழம நேரலையில் கண்டுகளிக்கலாம்.



# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலும் சிவில்சமூகங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

தமிழ் மக்கள் பொருத்தமான தலைமைகள் கிடைத்தால் பொருத்தமான போராட்ட வழிமுறைகள் கிடைத்தால் வீதியில் இறங்குவார்கள் போராடுவார்கள் என்பதை கடந்த வாரம் நிகழ்ந்த ஐந்துநாட் பேரணி உணர்த்தியிருக்கிறது.

தமிழ்ச் சிவில் சமூகங்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மக்களைத் திரட்ட முடியும் என்ற ஒரு பாடத்தை இந்தப் பேரணி புகட்டியிருக்கிறது. அதே சமயம் தமிழ்ச் சிவில் சமூகங்களுக்கும் கட்சிகளுக்கும் இடையிலான உறவில் ஒரு பொருத்தமான பொறிமுறை இல்லையென்றால் கட்சிகளோ அல்லது நிதி வழங்குனர்களோ இந்தப் போராட்டங்களை தத்தெடுக்க கூடிய ஆபத்துக்கள் அதிகம் இருக்கும் என்பதனையும் இந்தப் போராட்டம் உணர்த்தியிருக்கிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த சிவில் செயற்பாட்டாளர்கள் முதலில் இந்த போராட்டத்தை குறித்து சிந்தித்திருக்கிறார்கள். புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புக்கள் அதற்கு பக்கபலமாக இருந்திருக்கின்றன. இப்போராட்டத்தை குறித்து முதலில் சிந்தித்த சிவில் சமூக பிரதிநிதிகள் போராட்டத்திற்கு உதவி கேட்டு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அணுகியிருக்கிறார்கள். இது தொடர்பில் மட்டக்களப்பில் நடந்த சந்திப்பில் மக்கள் பிரநிதிகளும் பண்குபற்றியிருக்கிறார்கள். இதன் மூலம் போராட்டத்துக்குள் நுழைந்த சுமந்திரனும் சாணக்கியனும் போராட்டத்தை எப்படித் தத்தெடுக்கலாம் என்று சிந்தித்தார்கள் என்று ஒரு குற்றச்சாட்டு எழுந்தது.

தொடக்கத்தில் போராட்டம் சுமார் முப்பது பேர்களோடுதான் ஆரம்பமாகியது. மழை பெய்துகொண்டிருந்தது. பொலிசார் நீதிமன்ற தடை உத்தரவுகளை முன்வைத்து போராட்டத்தை நடத்தியவர்களை தடுக்க முற்பட்டிருக்கிறார்கள். இதுவிடயத்தில் சாணக்கியனும் உட்பட அரசியல்வாதிகள் போலீசாரின் தடையை உடைத்துக்கொண்டு துணிந்து முன் சென்றிருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் போலீசார் பேரணியை தடுப்பதை நிறுத்திவிட்டு அது செல்லும் வழியெல்லாம் வீதி ஒழுங்கைப் பேணும் நடவடிக்கைகளில் இறங்கி விட்டார்கள்.

முதலில் அது ஒரு கவன ஈர்ப்பு நடைபயணம் என்றுதான் கூறப்பட்டது. ஆனால் முஸ்லிம்களின் கிராமங்களுக்குள் நுழைந்த பொழுது அது பெருந்திரள் பேரணியாக மாறியது. வடக்கிலும் அது முடியும்போது பெருந்திரள் பேரணியாக காணப்பட்டது. அதாவது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் போராடத் தயார் ஆனால் தலைமை தாங்கத்தான் அமைப்புகளோ பொருத்தமான குடிமக்கள் சமூகத்தலைவர்களோ கிடையாது என்பதனை இப்போராட்டம் உணர்த்தியிருக்கிறது.

பொருத்தமான குடிமக்கள் சமூகத் தலைவர்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் சமயத் தலைவர்களை முன்னிறுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது.சமயத் தலைவர்கள் தாம் சார்ந்த சமய நிறுவனங்களுக்கு கட்டுப்பட்டவர்கள். சமய நிறுவனங்களுக்கும் அரசியல் உண்டு. எனினும் அவை அவற்றின் முதலாவது அர்த்தத்தில் சமய நிறுவனங்கள். அரசியல் பணிகளுக்குரியவை அல்ல. ஆனால் ஒரு சமூகத்தின் தேவைகளின் நிமித்தம் சமையத் தலைவர்கள் அரசியல் பணிக்கு வரமுடியும். இதற்கு உலகம் முழுவதும் உதாரணங்கள் உண்டு.

இந்தியாவில் சுதந்திரப் போராட்ட காலத்தில் ஆன்மீகவாதிகளின் ஈடுபாடு மிக அதிகமாக இருந்தது. ஈழத் தமிழ் சிந்தனையாளர் ஆகிய மு. தளைய சிங்கம் இது தொடர்பில் கூறும்பொழுது ராமகிருஷ்ண மிஷன் கட்டியெழுப்பிய ஒரு கூட்டு உளவியல் அடித்தளத்தின் மீதுதான் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கான கருக்கள் உருவாகின என்ற பொருள்பட கூறுவார். அதாவது இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கான ஒரு கூட்டு உளவியல் தயாரிப்பை செய்ததில் ராமகிருஷ்ண மிஷனுக்கு ஒரு பெரிய பங்கு இருந்தது.

எப்படி என்றால் அன்னியர் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி ஆங்கில மோகம் கொண்டிருந்த இந்திய படித்த நடுத்தர வர்க்கம் மேற்கத்தியக் கல்வி, மேற்கத்திய சிந்தனை, மேற்கத்திய தத்துவம் போன்றவற்றை பெருமையோடு பின்பற்றிக் கொண்டிருந்த ஒரு பின்னணியில் தனது சொந்தப் பண்பாடு மதம் விழுமியங்களை குறித்து ஒருவித தாழ்வு மனப்பான்மையோடு காணப்பட்டது. ஆனால் விவேகானந்தரின் சிகாக்கோ உரைக்குக் கிடைத்த ஆதரவும் அங்கீகாரமும் அந்த மனக்கூனலை நீக்கியது. இதன் விளைவாக இந்திய நடுத்தர வர்க்கம் மேற்கத்தியக் கல்வி குறித்தும் மேற்கத்தைய மேலாண்மை குறித்தும் கொண்டிருந்த பிரமைகள் உடைந்து அதன் கூன் நிமிர்ந்தது என்றும் கருதப்படுகிறது.இந்திய படித்த நடுத்தர வர்க்கத்தின் தாழ்வுச் சிக்கல் நீங்கியதும் அது போராடத் தொடங்கியது என்று தளையசிங்கம் கூறுகிறார்.

தென்னாபிரிக்காவில் ஆயர் டெஸ்மன் டூட்டு, கிழக்குத் தீமூரில் சமாதானத்திற்கான நோபல் பரிசை பகிர்ந்து கொண்ட மற்றொரு ஆயர், லத்தீன் அமெரிக்காவின் விடுதலை இறையியலை முன்னெடுத்து அதனாலேயே கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுருக்கள் என்று பரவலாக உதாரணங்கள் உண்டு.தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்திலும் தமது அரசியல் பங்களிப்புக்களுக்காக கொல்லபட்ட ஆல்லது காணாமல் ஆக்கப்பட்ட கிறீஸ்தவ மதகுருக்கள் உண்டு.

அதேசமயம் இலங்கைதீவில் ஒரு கெட்ட முன்னுதாணமும் உண்டு. அரசியலில் மாசங்கத்தின் செல்வாக்கு இச்சிறிய தீவை எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது?

எனவே ஒரு சுதந்திரப் போராட்டத்தில் அல்லது ஒரு மக்கள் திரளின் மனித உரிமைகளுக்கான போராட்டத்தில் ஆன்மீக நிறுவனங்கள் சமய நிறுவனங்கள் உன்னதமான பங்களிப்பைச் செய்ய முடியும். போராடும் மக்களின் ஆன்ம பலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் போராட்டத்தின் நீதியின் மனச் சாட்சியாக நின்று போராட்டத்தை வழி நடத்துவதற்கும் ஆன்மீகத் தலைவர்களும் சமயத் தலைவர்களும் பொருத்தமான பங்களிப்பைச் செய்ய முடியும். எனவே மத நிறுவனங்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்பதல்ல. ஆனால் பிரச்சினை என்னவென்றால் சிவில் அமைப்புக்களின் கட்டமைப்புக்குள் மத நிறுவனங்களையும் உள்வாங்கி சிவில் தலைவர்களே அதை முன்னெடுப்பதே அதிகம் பொருத்தமானதாக இருக்கும்.

தமிழ் மக்களின் வரலாற்றில் அரசியல் தலைவர்கள் உருவாகியிருக்கிறார்கள். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தளபதிகள் உருவாகியிருக்கிறார்கள். ஆனால் சிவில் தலைவர்கள் என்று கருதப்படுவோர் பெருமளவுக்கு உருவாகியிருக்கவில்லை. ஆயுதப் போராட்டத்திற்கு முந்திய மிதவாத அரசியலிலும் சரி ஆயுதப் போராட்டத்திற்குப் பிந்திய மிதவாத அரசியலிலும் சரி அவ்வாறான சிவில் தலைமைகள் பெருமளவுக்கு மேலெழவில்லை.

கடந்த நூற்றாண்டின் முற்கூறில் யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரசை ஹண்டி பேரின்பநாயகம் உருவாக்கினார். எனினும் அதன் தொடர்ச்சியாக அதுபோன்ற வேறு அமைப்புகள் தமிழ் மக்கள் மத்தியில் முன்னணிக்கு வரவில்லை. கட்சி அரசியலின் போதும் சிவில் சமூகங்கள் பலமான வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை. ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் பல சிவில் சமூகத் தலைவர்கள் ஒன்றில் ஆயுதப் போராட்டத்தில் இணைந்தார்கள் அல்லது ஆயுதப்போராட்டத்தோடு தொடர்புடையவர்கள் என்ற காரணத்தால் கொல்லப்பட்டார்கள் அல்லது புலம் பெயர்ந்தார்கள்.

கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய சிவில் சமூகத் தலைவர்கள் எழுச்சி பெறவில்லை.தமிழ் மக்கள் பேரவையோ அல்லது அதையொத்த வேறு எந்த அமைப்புமோ அவ்வாறான சிவில் சமூகத் தலைவர்களை குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு உருவாக்கத் தவறிவிட்டன.இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் தமிழ் மக்கள் மத்தியில் சிவில் சமூகத் தலைமைகள் என்று கூறத்தக்க ஒரு பாரம்பரியம் மிகவும் பலவீனமாகவே இன்றுவரை காணப்படுகிறது.

இப்படிப்பட்ட ஒரு வெற்றிடத்தில்தான் 2009க்குப்பின் முன்னாள் மன்னார் ஆயரைப் போன்றவர்கள் அந்தப் பாத்திரத்தை வகிக்க முற்பட்டார்கள். எனினும் அரசியல் தலைவர்களின் மீது செல்வாக்கைப் பிரயோகிக்கும் ஒரு வளர்ச்சியை அவர்கள் முழுமையாக அடையவில்லை.

இப்படிப்பட்ட மிகப் பலவீனமான ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில்தான் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியில் மதத் தலைவர்களை முன்னிறுத்த வேண்டிய ஒரு காலச்சூழல் ஏற்பட்டது.

பேரணியின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை அதாவது பொத்துவிலில் தொடக்கி பொலிகண்டி வரை அரசியல்வாதிகள் பேரணியை ஹைஜாக் பண்ண முயன்றதாகக் குற்றச்சாட்டுக்கள் உண்டு. இதன் விளைவாகவே பேரணியை எங்கே முடிப்பது என்பதில் குழப்பம் ஏற்பட்டது. இப்பிணக்கானது பேரணி திருகோணமலையை அடைந்தபோது பகிரங்கமாகவும் கூர்மையாகவும் வெளிப்பட்டது. திருகோணமலையில் மதத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் முரண்பட்டுக் கொண்டார்கள். அரசியல் தலைவர்கள் பேரணியின் மீது செல்வாக்குச் செலுத்துவதை ஏற்பாட்டுக் குழு இயன்றளவுக்கு தவிர்க்க முயற்சித்தது. ஆனாலும் அதை முழுமையாக தடுக்கக்கூடிய சக்தி ஏற்பாட்டு குழுவுக்கு இருக்கவில்லை. ஏனெனில் பேரணியின் தொடக்கத்தில் போலீஸ் தடைகளை உடைத்தமைக்கும் பேரணி எதிர்பாராத வெற்றியைப் பெற்றதிற்கும் அரசியல் கட்சிகளின் பங்களிப்பும் ஒரு காரணம்.

எதுவாயினும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அப்பால் இது ஒரு நம்பிக்கையூட்டும் தொடக்கம். பொருத்தமான தருணம் பொருத்தமான அறவழி போராட்ட வழிமுறைகளுடன் பொருத்தமான தலைமைகள் துணிச்சலாக முன்வந்தால் தமிழ் மக்கள் போராடுவார்கள் என்ற செய்தியை பேரணி உணர்த்தியிருக்கிறது.சிவில் சமூகங்கள் தங்களைப் பொருத்தமான விதத்தில் ஒன்றிணைத்து எந்தவொரு வெளித் தரப்பினாலும் கையாளப்பட முடியாத சுயாதீனமான வளர்ச்சியை அடைவதன் மூலம் சிவில் சமூகங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான ஒரு பொருத்தமான சமநிலையைப் பேணலாம். அடுத்தடுத்த போராட்டங்களுக்கு அப்படியொரு சமநிலை அவசியம்.மக்கள் போராடத் தயாராகத்தான் இருக்கிறார்கள். பொருத்தமான தலைவர்கள்தான் இல்லை?

## வீணாவின் கவிக்கணை

பேதையென்பீர், பெதும்பையென்பீர்,
அவளே இவ்வுலகின் கண்
என்பதை அறிவீரோ?
மங்கையென்பீர், மடந்தையென்பீர்,
அவளே உன் மன போதைக்கு
மருந்தென்பதை அறிவீரோ?
அரிவையென்பீர், தெரிவையென்பீர்,
அவளே உன் குலம் காக்க
வந்தவள் என்பதை அறிவீரோ?
பேரிளம் பெண் என்பீர்,
அவளே உன் வாழ்வின் நிம்மதி
என்பதறிவீரோ?

# March Break becomes April Break due to Pandemic

# கோவிட்-19 தொற்று காரணமாக பங்குனி விடுமுறை சித்திரை விடுமுறையாகியது

ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த வசந்த காலத்தில் கிட்டும் விடுமுறையான பஙகுனி விடுமுறை சித்திரை விடுமுறையாக நேற்று ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சரால் அறிவிக்கப்பட்டது. - இந்த ஆண்டு, தொற்றுநோய் காரணமாக மார்ச் மாதத்தில் வரும் விடுமுறை கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு பின்னர் நேற்றைய அறிவிப்பைத் தொடர்ந்து ஏப்ரல் 12 முதல் 16 வரை அமுலுக்கு வரவள்ளது என மாகாண கல்வி அமைச்சரம் ஸ்டீபன் லெச்சே அறிவித்தார்.



முாகாணத்தில் உள்ள ஆசிரியர்களின் தொழிற்சங்கங்கள் முன்வைத்த களின் ஆட்சேபனைகளை நிராகரித்து , மார்ச் 15 முதல் 19 வரை திட்டமிடப்பட்ட பாரம்பரிய விடுமுறையை பின்போடும் அறிவிப்பை கல்வி அமைச்சர் ஸ்டீபன் வெளியிட்டார்

ஆனால் புதிய, மேலும் தொற்று வகைகள் ஏற்கனவே மக்கள் மத்தியில் பரவி வருவதாலும் ஒன்றாரியோ மாகாணம் கோவிட் -19 உடன் தொடர்ந்து போரிடுவதாலும் கூட்டங்கள் மற்றும் பயணங்கள் குறித்து தங்கள் எச்சரிகையை வெளியிட்ட பொது சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையை ஏற்று இந்த விடுமுறையை ஒத்திவைப்பதாக லெச்சே கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கை "பாடசாலைகளில் சமூகங்களின் நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த உதவும் ஒரு முக்கியமான வழியாகும்" என்றும் அமைச்சர் கூறினார். ஒன்றாரியோவின் கல்விச் சட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகள் 194 நாள் பள்ளி ஆண்டைக் குறிப்பிடுகின்றன, மேலும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட நாட்கள் வேலை செய்யாத காரணத்தால் அத்தகைய மாற்றத்தைச் செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருப்பதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

டொராண்டோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான டாக்டர் அன்னா பானர்ஜி, மார்ச் விடுமுறை தொடர்பாக தான் "இரு மனதில் இருந்தேன் என்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார் கூறியிருந்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அதைக் கொண்டிருப்பதன் நன்மைகள் என்னவென்றால், இது வாழ்க்கையை இயல்பாக்குகிறது மற்றும் மாணவர்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் விலகி ஓய்வெடுக்க ஒரு வாய்ப்பை அளிக்கிறது என்று கூறினார்.

இந்த நேரத்தில் மாணவர் ஒன்றுகூடலாம், முகக் கவசங்கள் இல்லாமல் மற்றும் இடைவெளிகளை பேணாமல் இருப்பது எற்புடையது அல்ல. மேலும் தங்கள் நகரத்திற்கு வெளியே ஒருவரும் பயணிக் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்

ஆயசஉா டீசயம என்று அழைக்கப்படும் இந்த குறுகிய கால விடுமுறை பின் தள்ளப்பட்டது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில, இது போன்ற முடிவுகளை பொது சுகாதார நிபுணர்களால் எடுக்க வேண்டும். தொற்றுநோயை அதிகரிக்கும் அபாயத்தைக் குறைக்கும் குறிக்கோளுடன் இந்த முடிவுகள் எடுக்கப்பட வேண்டும், இருப்பினும், மாணவர் மற்றும் ஊழியர்களின் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு தொடர்பாகவும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.."






# வடக்கையும் கிழக்கையும் சிங்கள – பவுத்த மயப்படுத்தும் கைங்கரியத்தில் சிங்கள – பவுத்த பேரினவாதிகள் ஓயப்போவதில்லை!

மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பது போல பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை என்ற போராட்டப் பேரணி பெப்ரவரி 03 தொடங்கி - பெப்ரவரி 07 மட்டும் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. இருந்தாலும் நீதிமன்றங்கள் விடுத்த தடை உத்தரவுகளை மீறியவர் மீது காவல்துறை சட்ட நடவடிக்கை எடுக்க ஆயத்தமாகி வருகிறது. பொலீசார் முன்னர் வாங்கிய தடையுத்தரவுகள் பயனற்றுப் போன மன வெப்பியாரத்தில் இருக்கிறார்கள். போராட்டப் பேரணியை பொலிசார் படம் எடுத்துள்ளார்கள். அதில் கலந்து கொண்ட வாகனங்களின் இலக்கங்களையும் பதிவு செய்துள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பாக இருக்கும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரா கடும் கோபத்தில் இருக்கிறார்.



நாடாளுமன்றத்தில் பேசிய அவர் ”சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கவே தமிழ் அரசியல்வாதிகள் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான பேரணியில் ஈடுபட்டார்கள். இவ்வாறான செயற்பாடுகளால் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ”முன்னெடுக்கப்படும் போராட்டத்தால் எதுவும் மாறப்போவதில்லை. நீதிமன்றங்கள் மூலமே நீதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர பேரணி நடத்தி தீர்வைப் பெற முடியாது என்பதை தமிழர் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்” என்கிறார்.

கடும் சிங்களத் தேசியவாதப் போக்கைக் கொண்ட அமைச்சர் சரத் வீரசேகர முன்னாள் கடற்படை அதிகாரி. கோட்டாபய இராசபக்சவை சனாதிபதி இருக்கையில் இருத்தியதற்கு சிங்கள-பவுத்த அறிவுப் பிழைப்பார்களைக் கொண்ட ”வியத்மக” இயக்கம் முக்கிய பங்கு வகித்திருந்தது. அந்த அமைப்பின் முக்கியமான தலைவர்களில் ஒருவர் சரத் வீரசேகர என்பது கவனிக்கத்தக்கது.

கடந்த சில ஆண்டுகளாக ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர்களிலும் தோன்றி சர்ச்சைகளை உருவாக்கி வருபவர். மாகாண சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண சபைகளுக்கு காணி அதிகாரமோ பொலீஸ் அதிகாரமோ கொடுக்கப்பட மாட்டாது என ஏற்கனவே அறிவித்துவிட்டார்.

பேரணி தொடங்கிய இடத்திலேயே பொலீசார் தாங்கள் வைத்திருந்த நீதிமன்ற தடையுத்தரவுகளைக் காட்டி அதனை தடுக்க முயற்சித்தார்கள். காவல்துறை கோவிட் தொற்று நோயைக் காரணம் காட்டியே நீதிமன்ற தடையுத்தரவுகளை வாங்கியிருந்தார்கள். இதனால் பொலீஸ் அந்தத் தடையுத்தரவுகளில் குறிக்கப்பட்டிருந்த பேர்வழிகளை மட்டும் தடுக்கலாம். மற்றவர்களை தடுக்க முடியாது.

பேரணி ஏற்பாட்டாளர்கள் யார் யாருக்கு எதிராக பொலீஸ் நீதிமன்றத் தடையுத்தரவை வாங்கியதோ அதில் குறிக்கப்பட்டவர்கள் அந்தப் பிரதேசத்துப் பேரணியில் கலந்து கொள்வதைத் தவிர்த்தார்கள். இதனால் பேரணி தொடர்வதை பொலீசாரால் தடுக்க முடியவில்லை.

தொடக்கத்தில் சுமந்திரன் மற்றும் சாணக்கியன் காட்டிய துணிச்சலே பேரணியைத் தடுக்க பொலீசார் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இல்லையேல் அந்தப் பேரணி தொடங்கிய இடத்திலேயே பொலீசாரால் அது முறியடிக்கப்பட்டிருக்கும். பேரணியின் முன்வரிசையில் சென்றவர்களில் பெரும்பாலோர் இளைஞர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் தலையில் தலைக்கச்சு அணிந்திருந்தார்கள்.

இந்தப் பேரணியை வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புக்களே குறுகிய கால இடைவெளியில் ஒழுங்கு செய்திருந்தன. அதற்குத் ததேகூ இன் சார்பில் சுமந்திரன் உடனடியாக முழு ஆதரவைத் தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து ஏனைய கட்சிகளும் தமது ஆதரவைத் தெரிவித்தன. சிவில் அமைப்புக்கள் பின்வரும் பத்துக் கோரிக்கைகளை மையப்படுத்தி இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினார்கள்.

(1) தமிழ்ப் பகுதிகளில் உள்ள மரபுவழி மற்றும் பூர்வீக காணிகளைக் கைப்பற்றி அங்குள்ள இந்துக் கோயில்களை இடித்துவிட்டு அவற்றில் பவுத்த விகாரைகளைக் கட்டி சிங்களப் பகுதிகளாக மாற்றிவிடுதல்.

(2) போர் முடிந்த பின்னர் தமிழ்ப் பகுதிகளை இராணுவ மயப்படுத்துவது தொடர்கிறது. அதன் நோக்கம் தமிழர்களது வரலாற்று அடையாளத்தை அழித்து அதன் குடித்தொகையை சிங்கள மயமாக்கல் ஆகும். இதற்காக அரசின் வெவ்வேறு திணைக்களங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. மேலும் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்கின்றன.

(3) கவலை என்னவென்றால் அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எழுதும் ஊடகவியலாளர்களை இலக்கு வைக்கிறது. மேலும் மனித உரிமை மீறல்களைப் பொதுவெளியில் கொண்டுவரும் சிவில் அமைப்புச் செயற்பாட்டாளர்களும் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

(4) தமிழ்க் கால்நடைப் பண்ணையாளர்கள் பலதரப்பட்ட சிக்கல்களை எதிர்நோக்குகிறார்கள். அவர்களது மேய்ச்சல் நிலம் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அவர்களது மாடுகள் கொல்லப்படுகின்றன.

(5) தமிழர்கள் போரில் இறந்தவர்களை நினைகூரும் உரிமையை அரசாங்கம் தடை செய்யப்பட்டுள்ளது. அதையொட்டிய நினைவு நிகழ்ச்சிகள் தடைசெய்யப்பட்டுள்ளன. துயிலும் இல்லங்கள் மற்றும் நினைவாலயங்கள் தகர்க்கப்படுகின்றன.

(6) கோவிட் தொற்று நோயால் இறக்கும் முஸ்லிம்களின் உடல்கள் அவர்களது மத மரபுக்கு மாறாக அடக்கம் செய்வதற்குப் பதில் எரிக்கப்படுகின்றன.

(7) பயங்கரவாதத்துக்கு எதிரான தடுப்புச் சட்டம் தமிழ் இளைஞர்களை 40 ஆண்டுகளுக்கு மேலாக நீதிமன்றத்தில் நிறுத்தாமல் விசாரணையின்றி சிறையில் அடைத்து வைத்துள்ளது. இந்தச் சட்டம் இப்போது முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது.

(8) தமிழ் அரசியல் கைதிகள் நீதிவிசாரணையின்றி ஆண்டுக்கணக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் தொடர்ச்சியாகப் பல சிங்களக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கி வருகிறது. ஆனால் தமிழ் அரசியல் கைதிகள் எவருக்கும் மன்னிப்பு வழங்கப்படவில்லை.

(9) வலிந்து காணாமல் போன தமது உறவினர்களை கண்டுபிடித்துத் தருமாறு கேட்டு வருகிறார்கள். ஆனால் அரசு அவர்களர் கோரிக்கைக்குச் செவிசாய்க்க மறுக்கிறது.

(10) மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் நாளாந்த சம்பளத்தை ரூபா 1,000 ஆக அதிகரிக்க வேண்டும் என்று போராடி வருகிறார்கள். ஆனால் அரசாங்கம் அவர்களது கோரிக்கைக்கு செவிசாய்க்காது வருகிறது.

மேற்காட்டிய சிக்கல்கள் பற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையும் உறுப்பு நாடுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டாக வேண்டுகோள் விடுக்கிறோம்.

இந்த அறிக்கையில் இருபதுக்கும் மேலான சிவில் சமூகங்கள் கையொப்பம் இட்டிருந்தன. இந்த அறிக்கை கிடைத்ததாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை அதிகாரிகள் தெரிவித்தார்கள். மேலும் பேரணியில் பங்குபற்றுபவர்கள் பாதுகாப்பாக இருக்குமாற கேட்டுக் கொண்டார்கள்.

இந்தப் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு முதல் முறையாக முஸ்லிம் மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. பேரணிக்கு முஸ்லிம்கள் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவர் ரிசாட் பதியுதீன் அறிக்கை மூலம் கேட்டிருந்தார். இருந்தும் முஸ்லிம் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. விதி விலக்காக திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில்



வெற்றி பெற்ற ஒரு முஸ்லிம் உறுப்பினரே பேரணியில் கலந்து கொண்டு ஆதரவ தெரிவித்தார். அதற்கு முன்னர் ஓட்டமாவடியில் முன்னாள் நா.உறுப்பினர் ஹசன் அலி கலந்து கொண்டு உரையாற்றினார்.

முஸ்லீம் இளைஞர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் மாலைகள் அணிவித்து தமிழ்த் தலைவர்களை வரவேற்ற காட்சிகள் முற்றிலும் எதிர்பாராதது.

காகம் இருக்க பனம்பழம் இருந்த கதையாக இந்தப் பத்து கோரிக்கைகளில் இரண்டு நிறைவேறிவிட்டன. முஸ்லிம்கள் ஜனசாக்களை தங்கள் மதக் கோட்பாட்டின் படி அடக்கம் செய்யலாம் என பிரதமர் மகிந்தா இராசபக்ச நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார். மலையகத் தோட்டத் தொழிலாளர்களது சம்பளமும் ரூபா 750 இல் இருந்து ரூபா 1,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான தீர்மானம் சம்பள நிருணய சபை ஊடாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிந்திக் கிடைத்த செய்திகள் பிரதமர் மகிந்த இராசபக்ச அவர்களின் ஊடகப் பிரிவு ஜனசாக்களை அடக்கம் செய்யலாம் என வந்த செய்திகள் தவறானவை எனத் தெரிவித்துள்ளது.

பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை என்ற பேரணி பற்றிய செய்திகளை தென்னிலங்கை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்து விட்டன. காரணம் தெரிந்ததே. அதே நேரம் நாடாளுமன்றத்தில் இந்தப் பேரணிபற்றிய சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

பொத்துவில் - பொலிகண்டி பேரணி முடிந்த கையோடு நா.உறுப்பினர் சுமந்திரனுக்கு அரசாங்கம் வழங்கிய சிறப்பு செயலணிப் படைப் பாதுகாப்பு உடனடியாக விலக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவை தானே இட்டதாக சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தனது உயிருக்கு இன்னும் அச்சுறுத்தல் இருப்பதாக ஒரு மாதத்திற்கு முன்பு சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவினாலேயே தனக்குத் தெரிவிக்கப்பட்டதாக சுமந்திரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தனக்கு சிறப்புப் பாதுகாப்பு தேவையென எந்த கோரிக்கையையும் வைக்கவில்லையென்றும், உயிருக்கு ஆபத்து உள்ளது என்ற அடிப்படையில் தனக்கு அரசாங்கத்தால் சிறப்பு பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், இப்போது தனது உயிருக்கு ஏதேனும் நடந்தால் அமைச்சர் சரத் வீரசேகரவே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று சுமந்திரன் கூறினார். தனக்கு எதிராக எந்த நீதிமன்றங்களிலும் தனது பெயர் குறிப்பிட்ட தடையுத்தரவு

கனடா – நக்கீரன்

எதுவும் பிறப்பிக்கப்படவில்லை, தான் எந்த நீதமன்ற தடையுத்தரவையும் மீறவில்லையென்றும் தெரிவித்தார்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இலங்கையின் சுதந்திர நாள் கரிநாளாக வடக்கிலும் கிழக்கிலும் அனுட்டிக்கப்பட்டுள்ளது. பேரணியில் கலந்து கொண்டவர்கள், சுமந்திரன், சாணக்கியன் உட்பட. பலர் கருப்புச் சட்டை அணிந்திருந்தார்கள்.

சனாதிபதி கோட்டாபய இராசபக்ச பதவிக்கு வந்த பின்னர் தமிழ்மக்கள் பல நெருக்கடிகளுக்கு நாளாந்தம் முகம் கொடுத்து வருகிறார்கள். சிவில் சமூகம் சுட்டிக்காட்டிய வண்ணம் தமிழ்மக்களுக்குச் சொந்தமான காணிகள் தொல்லியல் அகழ்வாராச்சி என்ற பெயரில் தொல்லியல் திணைக்களம் கைப்பற்ற முனைகிறது. அது போலவே சைவ வழிபாட்டுத் தலங்கள் தொல்லியல் திணைக்களத்தின் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயம், திருகோணமலை மாவட்டம் கன்னியா பிள்ளையார் கோயில், செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயம், முருகன் ஆலயம், வேற்றுச்சேனை சித்திவிநாயகர் ஆலயம் உட்பட்ட பல ஆலயங்களில் தமது பாரம்பரிய, கலாசார, சமய, வழிபாடுகளைச் செய்ய முடியாதவாறு ஆலயங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதோடு அங்கு பவுத்த விகாரைகள் நிறுவுவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன என இந்துக்கள் முறையிடுகிறார்கள். இந்த இந்து ஆலயங்கள் தொல்லியல் திணைக்களம் மற்றும் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச நியமித்த தொல்லியல் செயலணி இரண்டின் கிடுக்குத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. பாதிகப்பட்ட ஆலய அறங்காவல் சபையினர் தங்கள் உரிமையை நிலை நாட்ட நீதிமன்றத்தை நாடவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் கடந்த 18 ஆம் திகதி குருந்தாவசோக புராதன விகாரையின் சிதைவுகள் இருப்பதாகக் குறிப்பிட்டு அப்பகுதியில் தொல்லியல் ஆய்வுப் பணிகளை தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுடன் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்டனர். அப்போது மஞ்சள் ஆடை அணிந்த பவுத்த தேரர்கள் புடை சூழ அங்கு வருகை தந்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஒரு புத்தர் சிலையை அங்கு நிறுவி வழிபாடு செய்தார்.

அங்கு தொடர்ந்தும் ஆய்வு பணிகள் மேற்கொள்ளுப்பட்ட வந்த நிலையில் ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அமைந்துள்ள குருந்தூர் மலைப்பகுதியில் சிவலிங்கத்தை ஒத்த உருவத்தை கொண்ட சிதைவுகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளதாவது, ”முல்லைத்தீவு குருந்தூர் மலையில் நடைப்பெற்ற அகழ்வாராய்ச்சியில் கிடைத்த தொல்லியல் சிதைவுகளில் காணப்படும் சிவலிங்கத்தை ஒத்த உருவம் பல்லவர் கால எட்டுப்பட்டை (எட்டு முகம்) தாரா லிங்கம் என்பதை வரலாற்று ஆய்வாளர் திரு.மேுளு.திருச்செல்வம் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்” என்று தெரிவித்துள்ளார். அதே சமயம் தொல்லியல் திணைக்களம் அந்தச் சிதைவுகள் அனுராதபுரிக் காலத்து சிதைவுகள் என அறிவித்துள்ளது.

போகிற போக்கைப் பார்த்தால் இப்போது இந்துக் கோயில்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் முன்னர் பவுத்த விகாரைகள் இருந்தன எனச் சொல்வார்கள் போல் தெரிகிறது. அனுராதபுர காலத்தில் கட்டப்பட்ட கோகர்ண விகாரை மீதே இப்போது திருக்கோணேசுரம் கட்டப்பட்டடதாகவும் அதற்கான சான்றுகள் தன்னிடம் இருப்பதாகவும் மேத்தானந்த தேரர் சொல்கிறார். அதோடு நின்றுவிடாமல் யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் சப்புமால் குமாரய என்ற சிங்கள் அரசனால் கட்டப்பட்டது என்கிறார். இந்தத் தேரர் தொல்லியல் மரவுரிமைகள் தொடர்பாக ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட செயலணியில் ஒரு உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேசுரம் விஜயன் (கிமு 483 - 445) வருகைக்கு முன்னரே இருந்தது என போல் இ பீரிஸ் என்ற சிங்கள வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அதாவது கிமு ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்னரே திருக்கோணேசுவரம் இருந்திருக்கிறது. மேலும் யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்தைக் கட்டிய சப்புமால் குமாரய சிங்கள இளவரசன் அல்ல. அவன் சேரநாட்டில் இருந்து இலங்கையில் குடியேறிய சண்பகப் பெருமாள் என்ற சேர இளவரசன். இவன் கோட்டையை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகன் ஆவான். சண்பகப் பெருமாளின் தந்தை குருகுல மாணிக்கத் தலைவன் என்கிற பராக்கிரமபாகுவின் தளபதியாவான்.

தனது பேரனான ஜெயவீரன் என்பவனுக்குக் கோட்டை அரசைக் கொடுத்துவிட்டு ஆறாம் பராக்கிரமபாகு காலமானான். இதனையறிந்த செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்தை விட்டுக் கோட்டைக்குச் சென்று ஜெயவீரனைத் தோற்கடித்து ஆநாவது சிறி சங்கபோதி புவனேகபாகு என்னும் அரியணைப் பெயருடன் கோட்டை இராச்சியத்தின் அரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

இலங்கைத் தீவின் வரலாறு இப்போதல்ல நீண்ட காலமாகவே திரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பின்னணியில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் ஆன பேரணிக்குக் கிடைத்த மகத்தான மக்கள் ஆதரவு மனதுக்கு ஆறுதல் தருகிறது. இளைஞர்களின் எழுச்சி நம்பிக்கை தருகிறது. ஆனால் சிங்கள - பவுத்த பேரினவாதிகள் வாழாவிருக்கப் போவதில்லை.

வடக்கையும் கிழக்கையும் பவுத்த - சிங்கள மயப்படுத்தும் கைங்கரியத்தில் சிங்கள - பவுத்த பேரினவாதிகள் ஓயப்போவதில்லை என்பதுதான் இன்றைய யதார்த்தமாகும்.

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

Ontario



FACEDRIVE FOODS
டொரன்ரொவில் தற்போது உணவுப்பொருட்கள் விநியோகத்திற்கான Food Delivery App பயன்பாட்டில் உள்ளது
Local
Eco-Friendly
Affordable
நீங்கள் டொரன்ரொவில் ஒரு உணவகத்தையோ அன்றி பலசரக்கு கடையையோ நடத்துகின்றீர்களா?
தற்போது எம்மோடு இணைந்துள்ள சுமார் 300 உணவகங்களோடு நீங்களும் ஒருவராக இணைந்து எமது வாடிக்கையாளர்களான 250000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை எமது Food Delivery App ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.
Sign Up Today
இப்போதே எங்களோடு பதிவு செய்து மகிழ்வடையுங்கள்:
*குறைந்த கட்டணத்தில் விநியோகக் கட்டணங்கள்
*இலவசமாக உபகரணமும் பிறிண்டரும் கிடைக்கும்
*இலவசமான சந்தைப்படுத்தும் சேவைகள்
உங்களிடம் கேள்விகள் இருக்கின்றனவா?
அழையுங்கள்: 647 760 9272
Download on the App Store
Available on the Google Play


FACEDRIVE FOODS
டொரன்ரொவில் தற்போது உணவுப்பொருட்கள் விநியோகத்திற்கான Food Delivery App பயன்பாட்டில் உள்ளது
உங்களுக்கு மேலதிகமான வருமானம் தேவைப்படுகின்றதா?
ஒரு நாளைக்கு*
$200
சம்பாதிக்கலாம்
Become a driver
எமக்கு டெலிவரி சாரதிகள் தேவைப்படுகின்றார்கள்
உங்களிடம் கேள்விகள் இருக்கின்றனவா?
அழையுங்கள்: 647 760 9272
Download on the App Store
Available on the Google Play


Dream Design Build
Paramount
Custom Homes Ltd.
416-268-5296
www.paramountcustomhomesltd.net
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION
Incredible Quality
Quick Turnaround
Competitive Prices
140-100 Cowdray Court, Scarborough, ON M1S 5C8
Paramountcustomhomesltd@gmail.com

# A Panel Discussion on Eelam Tamil's Right to Self Determination

# ஈழத் தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமை தொடர்பான இணையவழி கருத்தரங்கு



கடந்த சில வருடங்களாக ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் அந்த உரிமைகளை அடைவதற்கான வழிமுறைகளை உலகெங்கும் உள்ள அறிஞர்கள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆகியோரை இணைத்து செயலாற்றி வரும் ஏபிசி தமிழ் ஒலி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கருத்தரங்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் காலை 7.00 மணிக்கு இணையவழி ஊடாக ஆரம்பமானது. இந்த இணையவழி கருத்தரங்கில் முக்கிய கருப்பொருளாக எடுக்கப்பட்டது " ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுதல்" என்பதே ஆகும்.

மேற்படி கருத்தரங்களை ஏபிசி தமிழ் ஒலி அமைப்பின் பொறுப்பாளரும் கனடாவில் வாழ்பவருமான விமல் நவரட்ணம் தொகுத்து வழங்கினார். இந்த கருத்தரங்கில் முக்கிய பேச்சாளர்களாக **Dr. Livingstone Sewanyana- The UN Independdent Expert on the Promotion of a Democratic and Equitable International Order, Dr. Kumuthini Kunaratnam, Activist and Humanitarian, Kethika Logan Kanapathi- Human Rights and Social Activist, Dora Gorim, Human Rights Defender , Southern Cameroons** ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்களுடன் இலங்கையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈபிஆர்எல்எப் கட்சியின் முக்கிய பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரனும் கலந்து கொண்டார்.

Kethika Logan Kanapathi அங்கு உரையாற்றும்போது, இலங்கையில் காலங்காலமாக தமிழ் மக்கள் எவ்வாறு உரிமைகள் மறுக்கப்பட்டார்கள். சிங்கள இனவாதிகளால் திட்டமிட்டு நடத்தப்படும் இனக்கலவரங்களால் தமிழ் மக்களின் உயிர்கள் உடமைகள் ஆகியன அழிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும், தமிழ் மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாகவும் அடிமைகளாகவும் நடத்தப்படுகின்ற விதம் போன்றவற்றை தகுந்த தரவுகளுடன் எடுத்துரைத்தார்.

அடுத்து உரையாற்றிய **Dora Gorim** தனது உரையில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தென் கெம்ரூன் நாட்டு மக்களின் போராட்டம்இ அதனால் அந்த மக்கள் அனுபவிக்கும் அடக்குமுறைகள் மற்றும் வெள்ளைக்காரரர்களால் அந்த நாடு ஆளப்பட்ட காலம் போன்றவற்றை விபரித்து தங்கள் இனமும் அடக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதற்காக போராடுகின்ற வழிகளையும் நன்கு விபரித்தார்.

தொடர்ந்து பிரதான உரையாற்றிய **Dr. Livingstone Sewanyana** அவர்கள் ஈழத்தமிழர்கள் கடந்த பல ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் சபையில் தங்களுக்கு இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் அரசியல்கைது காணமால் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சனைகள் ஆகியவற்றை எடுத்துச் சென்றாலும், இதுவரையிலும் சரியான முறையில் சான்றுகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை தான் கவனித்து வருவதாகவும், எனவே இன்னும் சில நாட்களில் நடைபெறவுள்ள இலங்கை தொடர்பான விசாரனைகளின் போது, சர்வதேச மனித உரிமைகள் சபையில் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான தகுந்த ஆவனங்களை சமர்ப்பித்து நீதி கேட்டும் விடயத்தை கவனமாக மேற்கொள்ளும் படியும், அதற்கு தன்னாலான ஆதரவை வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் ஈழத் தமிழ் மக்கள் தங்களுக்கான சுய நிர்ணய உரிமைகளை நிலைநாட்டும் வகையில் தகுந்த முறையில் நிபுணர்களின் உதவியோடு ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், கூட்டாக இணைந்து இந்த விடயங்களில் ஈடுபட்டால் ஈழத்தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு சரியான பதில் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து பேசுவதற்கு அழைக்கப்பெற்ற முன்னாள் இலங்கை பாராளுமன்ற உறுப்பினரும் ஈபிஆர்எல்எப் கட்சியின் முக்கிய பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் சில முக்கிய விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

அவர் தனது உரையில் கடந்த காலங்களில் சர்வதேச மனித உரிமைகள் சபையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் ஆகியன நேர்த்தியாக இல்லாதபடியால் தான் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு நீதி கிட்டவில்லை என்றும், எனவே தற்போது இலங்கையில் தோன்றியுள்ள அரசியல் தடுமாற்றம் மற்றும் சீன , இந்தியா ஆகிய இரு நாடுகள் தொடர்பான தலையீடு காரணமாக தென்னாசியப் பிராந்தியத்தில் தோன்றியுள்ள நிலையற்ற தன்மை காரணமாக தமிழர் தரப்பின் பக்கம் காற்று வீசும் வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்து, தற்போது உள்ள எமக்கு சாதகமான சந்தர்ப்பத்தை நன்கு திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் பல அரசியல் ஆர்வலர்களும் அங்கு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

Carefirst
SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

கோவிட் -19
POP-UP சோதனை

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஒவ்வொரு வியாழக்கிழமை.
தொடக்க தேதி: ஜனவரி 14
2:00 p.m. - 6:30 p.m.

YMCA
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
ஒவ்வொரு புதன் & வெள்ளி.
தொடக்க தேதி: ஜனவரி 30
9:30 a.m. - 2:30 p.m.

Markham Chinese Presbyterian Church
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
ஒவ்வொரு செவ்வாய் & புதன்.
தொடக்க திகதி: பிப்ரவரி 2
9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
www.carefirstontario.ca
Walk-In ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் www.carefirstontario.ca அல்லது அழைக்கவும் 416-646-5108

உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association
Carefirst Family Health Team
Health for All Family Health Team
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on January 27, 2021

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



தற்பொழுது நடைபெறுகிறது
Since 1989
சங்கர் அன் கோ
மாபெரும் மலிவு விற்பனை!
இறக்குமதியாளர்கள், மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
அனைத்து வீட்டு உபயோகப் பொருட்களின் புதிய வரவுகள் !
இல்லத்தரசிகளின் சமையற் கலைக்கான தேர்வுகளுக்கு தன்னிகரற்ற இடம் !
SOWBAGHYA
Preethi
ULTRA
சுவாமிப் படங்கள்
உணவுப் பொருட்கள்
பசுமையான மரக்கறி
மற்றும் பழவகைகள்
பூசைப் பொருட்கள்
ஆலயத்திற்குத் தேவையான
வழிபாட்டுப் பொருட்கள்
மங்கல நிகழ்வுகளான
திருமணம், குடிமனைபுகுதல்
ஆயுர்வேத மருந்துகள்
விசேட கூந்தல் தைலங்கள்
அனைத்து மூலிகைப்
பொருட்கள்....
ASIA Kitchen Machines
PREETHI Premier Mixies
ULTRA Wet Grinder
SOWBAGHYA
Wet Grinder
PREMIER
Wet Grinder
மண் சட்டிகள்
மட் பானைகள்
மண் அடுப்புகள்
மண் கூசாக்கள்
மின் தேங்காய் துருவி
மண்வெட்டிகள்
அப்பச்சட்டி
குளிப்பணியாரச்சட்டி
சில்வர் பானைகள்
எவர் சில்வர் பாத்திரங்கள்
எவர்சில்வர் பேணிகள்
சாப்பாட்டுத் தட்டுகள்
அலுமினி/மண் பானைகள்
அடுக்குச் சட்டிகள்
பிட்டுக் குடம், பானைகள்
தோசைக் கல்லு, உரல்
தேங்காய் துருவிகள்
கத்தி, கரண்டிகள்
இன்னும் பல!
தைப்பொங்கல் புத்தாண்டு,
மற்றும் ஆலய உற்சவங்கள், புதிய இல்லங்களின்
கிரகப் பிரவேச வைபவங்கள், திருமணங்கள் மற்றும்
விசேட வைபவங்கள் ஆகியவற்றுக்கு தேவையான அனைத்துப்
பொருட்களும் சங்கர் அன் கோவில் தவறாமல் கிடைக்கும்.
தற்போது தமிழர் புத்தாண்டை முன்னிட்டு, இல்லங்களுக்குத் தேவையான,
குறிப்பாக சமையல் அறைக்குத் தேவையான Rice Cookers. Grinding
Machines, Rotty Makers and Sumeet, Preeti, Premier Chefmaster
Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து விமானங்களின்
மூலம் இறக்குமதி செய்யப்பெற்றுள்ளன.
இன்றே தொலைபேசியில் அழைத்து உங்கள்
வருகையை உறுதி செய்த பின்னர்
முகக் கவசம் அணிந்து செல்லுங்கள்...
தற்போது காலை 8.30 மணி
தொடக்கம் இரவு 9.00 மணி
வரை திறந்திருக்கின்றது
அனைத்து விதமான
பசுமைமிகு பூக்கள்
மல்லிகை மொட்டு
கனகாம்பரம்
தாமரைப் பூ
சாமந்தி, அலரி
ரோஜாப்பூக்கள்
அல்லிப் பூ
கார்னேஷன் பூ
வாழை இலை
மாவிலை, அறுகு
வில்வம், துளசி, அரசிலை
பூச்சரம் எல்லா நாட்களும் கிடைக்கும்!
பிற்புறத்தில் தாராளமான வாகனத் தரிப்பிடமுண்டு
SHANKAR & Co.
2425 Eglinton Avenue East, Unit 6, Scarborough, ON M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916
(Kennedy & Eglinton)
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்!
OPEN
7 Days a week

*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #33 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

என்னால் எழுதப்பட்டு வரும் இத்தொடர் ஒரு ஒழுங்கு முறையில் அமையவில்லை என சில வாசகர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். ஆனாலும் அடுத்த வாரம் என்ன எழுதலாம் என சிந்திக்கின்றேனோ அதையே எழுதி வருகிறேன். இத்தொடர் நூல் வடிவில் வரும் போது வாசகர்கள் விரும்பியவாறு தலைப்பிட்டு ஒழுங்கு வரிசையில் வெளியிடப்படும்.

விழுப்புரம் சின்னையா மன்றாடியார் - ராஜாமணி அம்மையார் தம்பதிகளின் நான்காவது பிள்ளையாக பிறந்த கணேசமூர்த்தி என்கின்ற கணேசன் "சிவாஜி கணேசன்" என்று அழைக்கப்பட்ட ஆரம்ப வரலாறு அவரது வாழ்வில் அதிமுக்கியமானது. இன்று "சிவாஜி" என்றதும் தமிழ் கூறும் நல்லுலகிலும் சரி, கலாரசிகர்கள் மனதிலும் சரி, உடனே நினைவுக்கு வருபவர் நமது நடிகர் திலகம் இதுதான் உண்மை. அதற்குப் பின் தான் மராட்டிய மாவீரன் சத்ரபதி சிவாஜி என்கின்ற வரலாற்று நாயகனை நினைக்கின்றோம்!

அந்த வரலாற்று நாயகனின் திருநாமம் கணேசனுக்கு முன்னால் எப்படி இடம் பிடித்தது! நடிகர்திலகத்தின் வாழ்க்கைச் சரித்திரத்தை அறிய விரும்புவோர் அதிமுக்கியம் அறிந்திருக்கவேண்டிய இந்த விடயத்தை சற்று விபரமாகவே இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இடம் சென்னை கடற்கரை, ஆண்டு 1979இல் கொண்டாடப்பட்ட அண்ணா பிறந்த நாள் விழா. மறைந்த பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அம்மையாருக்கும் திமுக அரசுக்கும் நல்லுறவு இருந்த காலம். "நான் பிறந்த வீடும் புகுந்த வீடும் ஒன்று சேர்ந்தது கண்டு என் உள்ளம் மகிழ்ச்சியால் ஒன்று சேர்ந்து பொங்குகிறது", அண்ணா பிறந்தநாள் விழா மேடையில் நடிகர் திலகம் பேசிய மேடைப் பேச்சின் ஆரம்ப வரிகள் இவை!.

1950ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த சில நிகழ்ச்சிகளை நிழலாட விரும்புவதற்காக 1979ஆம் ஆண்டு மேடை நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடுகிறேன் நடிகர் திலகம் அப்படி பேசியதை திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு மொழிபெயர்த்துச் சொல்லப்பட்டது. அப்போது தான் அந்த அம்மையாருக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் திராவிடர் கழக காலம்தொட்டு திமுக ஆதரவாளராக வளர்ந்தவர் என்பது தெரியும்! பிறந்த வீடான திராவிடர் இயக்கமும், புகுந்த வீடான காங்கிரஸ் கட்சியையும் தேர்தல் உறவு கொண்டதை தான் சிவாஜி அவர்கள் அப்படி சுவைபடச் சொன்னார் என்பதை உணர்ந்த லட்சோபலட்சம் மக்கள் அடங்கிய அந்தக் கூட்டம் ஆரவாரம் செய்து கரவொலி முழங்கியது. *(நன்றி: நெஞ்சுக்கு நீதி கலைஞர் மு கருணாநிதி)*

திராவிட முன்னேற்றக் கழகம். 1949இல் தொடங்கப்படுவதற்கு முன்பே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டவர் சிவாஜி அவர்கள். மராட்டிய மாவீரன் சிவாஜி ஒரு மாபெரும் ராஜ்ஜியத்தை தனது வாள் முனையால் உருவாக்கினான் என்றாலும்கூட மன்னனாக மகுடம் சூட அவனது குலம் இடம் தரவில்லையென்று பழமைவாதிகளும் அவர்களுக்கு பாதுகாவலரான "காகப்பட்டரும்" தடுத்து நின்ற வரலாற்றை அண்ணா அவர்கள் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் அல்லது சந்திரமோகன் என்ற ஒப்பற்ற நாடகமாக தீட்டி இருந்தார். அந்த நாடகத்தில் அண்ணா அவர்களே "காகப்பட்டர்" வேடம் தாங்கி நடித்தார். காவியுடை, கமண்டலம் இவற்றுடன் அண்ணா "காகப்பட்ட"ராகத் தோன்றிப் பேசியதையும் நடித்ததையும் பாராட்டிப் புகழாத நடிகர்களே இல்லை! அந்த நாடகத்தில் சிவாஜியாக எம் ஜி ராமச்சந்திரன் (பின்னாளில் மக்கள் திலகம் எம் ஜி ராமச்சந்திரன் என்று அழைக்கப்பட்ட மறைந்த தமிழக முதல்வர்) நடிப்பார் என்று அண்ணாவின் திராவி-ட நாடு பத்திரிகையில் தொடர்ந்து விளம்பரங்கள் வந்து கொண்டிருந்தன.



"ராம்சந்தர்" என்ற பெயரில் அந்நாளில் திரைப்படங்களில் நடித்துக்கொண்டிருந்த எம் ஜி ஆர் அவர்கள் திடீரென அண்ணாவின் நாடகத்தில் நடிக்க இயலாது எனத் தெரிவித்து விட்டார். அண்ணாவின் நாடகத்தில் நடிப்பதால் அவரது கலைத்துறை முன்னேற்றத்திற்கு தடை ஏற்படும் என சிலர் அவரை அச்சுறுத்தி விட்டார்கள். (எம்ஜிஆர் அவர்களுடைய கருத்தும் அவரை சொல்லத் தூண்டிய சூழலும் இன்றும் கூட என்னை ஆச்சரியப்பட வைக்கிறது!) அறிஞர் அண்ணா, கலைஞர் மு கருணாநிதி ஆகியோரது நாடக திரைப்பட உரையாடல்களை மாற்றி எழுதும்படியோ, அழித்து திருத்துவது என்பது நடக்கக்கூடிய சமாச்சாரங்கள் அல்ல! அண்ணா அவர்களின் நாடக உரையாடல்களை பல இடங்களில் மாற்றி அமைக்க வேண்டும் என நடிகமணி டிவி நாராயணசுவாமி (இவரும் கழகத்தின் முக்கிய உறுப்பினர் பேச்சாளர் நடிகர்) அவர்கள் மூலம் தெரிவித்ததாகவும் அதைக் கேட்ட அண்ணா வியப்படைந்த தாகவும் எம்ஜிஆர் என்பவரின் இஸ்டத்திற்கு (இக்காலகட்டத்தில் எம்ஜிஆர் திமுக உறுப்பினர் அல்ல என்பது கவனிக்கத்தக்கது) வசனங்களை மாற்ற அண்ணா ஒப்புக்கொள்ளாததை காரணம் காட்டி எம்ஜிஆர் நாடகத்தில் நடிக்க மறுத்துவிட்டதாகவும் டிவி நாராயணசுவாமி அவர்களே பல மேடைகளில் பேசி இருக்கிறார்.

அண்ணாவின் உரையாடல்களை மாற்றி எழுத வேண்டும் என்று கருத்து தெரிவித்த எம்ஜிஆர் அவர்கள் பின்னாளில் அண்ணா பெயரை வைத்து அதிமுக ராஜ்ய பரிபாலனம் செய்தது வினோதமான வரலாறு. அண்ணாவின் உரையாடல்களை ஒரு தமிழனே பேச வேண்டும், அந்த தமிழ் ஒலி கேட்டு தமிழ் தாய் தன்மானத்துடன் தலைநிமிர வேண்டும் என்பது விதியாக இருக்கும் போது எம்ஜிஆர் அவர்களின் மறுப்பிலும் ஒரு நியாயம் இருப்பது போல் உணர்கிறேன். நாடக மேடையில் புகழ் பெற்று விளங்கிய வரும் ஈடுபாடு உடையவரும் அண்ணாவின் பாசறையில் பள்ளி கொண்டவருமான தோழர் வி சி கணேசன் "சிவாஜி" வேடம் தாங்குமாறு அண்ணா அழைத்தார். அழைப்பை ஏற்று சிவாஜி கணேசன் நடித்தார். அந்த நாடகத்திற்கு தலைமை தாங்கியவர் பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈவேரா அவர்கள். சிவாஜியாக மேடையில் தோன்றி அண்ணாவின் அடுக்குமொழி வசனங்களை கணீர் கணீர் என்று பேசி நடித்து நடிப்பால் புரட்சியை உண்டு பண்ணினார் நமது கணேசன். மறைந்த மராட்டிய மாவீரனை மேடையில் கண்முன் தோன்ற வைத்து ஆச்சரியத்தில் மூழ்கடித்தார். கணேசனின் உயிர்த்துடிப்பான நடிப்பை கண்டு அண்ணா பெரியார் உட்பட யாவரும் பிரமித்துப் போனார்கள். பெரியார் எழுந்தார் வீர சிவாஜியை மேடைக்கு கொண்டு வந்து நிறுத்தி விட்டார் கணேசன். நடிப்புத் திறமையை பாராட்டி விட்டு.. "ஒரு பத்து மாநாடு சாதிக்காத காரியத்தை இந்த ஒரு நாடகம் சாதித்துவிட்டது! இந்த நாடகத்தில் மிகச் சிறப்பாக நடித்த தம்பி கணேசனை வெறுமனே விட்டுவிடக்கூடாது. இன்று முதல் அவருடைய பெயரின் முன்னால் "சிவாஜி" என்ற பட்டமும் சேர்ந்து அவரை சிவாஜி கணேசன் என்று யாவரும் அழைப்போம் என்று அங்கு கூடியிருந்த மக்கள் வெள்ளத்தின் கரவொலி வாழ்த்துக்களுடன் வழங்கப்பட்ட சிறப்புப்பட்டமே "சிவாஜி" என அடுத்து வரும் நூற்றாண்டுகளிலும் பேசப்படப்போகிற நமது "சிவாஜி கணேசன்" ஆவார்!



கவிச்சக்கரவர்த்தி கம்ப நாடடாழ்வாரைப் பற்றிப் பேசும்போது நிச்சயம் சடையப்ப வள்ளலையோ அல்லது குலோத்துங்க சோழனைப் பற்றியோ பேசியாக வேண்டும். அதுபோல் நமது நடிகர் திலகம் அவர்கள் பற்றி பேசும்போதோ அன்றி எழுதும்போதோ கலைஞர் மு கருணாநிதி அவர்களைப் பற்றியும் பேசியாக வேண்டும். கலைஞர் மு க வையும் சிவாஜியையும் பிரித்துப் பேச முடியாத காலம் ஒன்று இருந்தது. "பராசக்தி" படம் தயா-ராகிக் கொண்டிருந்த வேளையில் எனக்கும் சிவாஜிக்கும் இருந்த நட்பு யாராலும் விளக்க முடியாத பாசமாக உருவெடுத்தது. அந்த பாசம் எப்படிப்பட்டது என்பதை 1963-ஆம் ஆண்டு என் தாய் அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது வெளியிடப்பட்ட ஒரு மலரில் சிவாஜியே வெளிப்படுத்தியிருக்கிறார். "நெஞ்சுக்கு நீதி" பாகம் இரண்டாம் பக்கம் 104ல் கலைஞர் இவ்வாறு எழுதுகிறார். அஞ்சுகம் அம்மையார் மறைவையொட்டி வெளியிடப்பட்ட நினைவு மலரில் சிவாஜி அவர்கள் எழுதியதிலிருந்தது... "சிறுவயது முதல் எங்களுக்குள் நெருக்கமான பழக்கம் உண்டு. இதற்கு எத்தனையோ காரணங்கள்... கலையோ.. அன்போ.. கொள்கையோ.. குணமோ.. எதுவோ.. எங்களை உயிராக இணைத்து வைத்திருந்தது. நாளடைவில் அது வளர்ந்து வலுப்பெற்றது. அவர்! அது யார்? வாய்நிறைய "மூனா கானா" (மு.க) என்று இளமையோடு நான் அழைக்கும் அவர்தான் சிவாஜி அவர்கள் நடித்து வெளிவந்த திரை சித்திரங்களில் சுமார் பத்து படங்களுக்கு கலைஞர் அவர்கள் வசனம் தீட்டியுள்ளார்.

அருமை நண்பர் கணேசனுக்காக கலைஞர் படைத்த அத்தனை பாத்திரங்களும் முத்திரை பதித்த பாத்திரங்களாகும். கலைஞர் அவர்களின் திரைக்காவிய வரிகள் இன்றும் உணர்ச்சியுடன் பேசப்படுவதற்கு உயிர்கொடுத்த நாயகன் நமது நடிகர் திலகமே என்றால் மிகையாகாது! கலைஞர் எழுதிய "நெஞ்சுக்கு நீதி" நூலில் "இயக்கத்தில் சிவாஜி" எனும் தலைப்பின் கீழ் சிவாஜி அவர்களுக்கும் தனக்கும் உள்ள தூய்மையான நட்பு பற்றியும் மிக விவரமாக நினைவு கொள்கிறார் மு.க. சிவாஜி அவர்கள் 1953ஆம் ஆண்டு திருப்பதிக்குச் சென்று வெங்கடாஜலபதியை வணங்கினார் என்பதைப் பெரிதுபடுத்தி கலைஞரையும் கழகத்திலிருந்து கொண்டே ஓரம்கட்ட தருணம் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிலர் தங்களது கடவுள் மறுப்புக் கொள்கையை முன்வைத்து சிவாஜி அவர்களை மனம் நோக வைத்தார்கள். 1949ற்கு முன்பிருந்தே திராவிடர் கழகத்திலும், அதன்பின் அண்ணாவின் தலைமையில் இயங்கி வந்த திமுக கழகத்தின் முக்கிய தொண்டராக பணிபுரிந்து வந்த சிவாஜி அவர்களை 1953க்குப் பிறகு திமுகவில் தன்னை இணைத்துக்கொண்ட எம்ஜிஆர் அவர்கள் சிவாஜியை கழகத்தில் இருந்து வெளியேற்ற பின்னிருந்து செயல்பட்டவர்கள் பட்டியலில் முக்கியமானவராக இருந்தார் என்பது இன்றும் எத்தனையோ தமிழர்களுக்கு தெரியாத தகவலாகும். கடவுள் மறுப்புக் கொள்கையை காரணம் காட்டி அவர்களை வெளியேற்றிய எம்ஜிஆரும் அவரது ஆதரவாளர்களும் பின்னாளில் அவர் முதலமைச்சராக இருந்தபோது... "தாய்மூகாம்பிகை அம்மனை தரிசிப்பதும், பூஜிப்பதும் தமது உரி-மை" என்று வாதிட்டார்கள்!. எவ்வளவு வேடிக்கை பாருங்கள். பெருந்தன்மையோடு கழகத்தில் இருந்து வெளியேறும் போது கூட "என்னால் அவர்களை பின்பற்ற முடியவில்லை அதனால் ஒதுங்கிக் கொள்கிறேன்" என்று தான் அறிக்கை விட்டாரே தவிர தவறாக எதையும் கூறி கழகத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தவில்லை என்பதை தொடர்ந்தும் அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்கள் சிவாஜியிடத்துக் கொண்டிருந்த மதிப்புமிகு பாசத்தால் உணரக்கூடியதாக இருந்தது.

1953ஆம் ஆண்டு கல்லக்குடி போராட்டத்தில் கலைஞர் அவர்கள் சிறை புகாமல் இருந்திருந்தால் சில சமயம் சிவாஜி அவர்கள் கலைஞருக்காக கழகத்தில் தொடர்ந்து இணைந்திருக்கலாம் அல்லது வெளியேறும் காலம் தள்ளிப் போய் இருக்கலாம் என்பது என் எண்ணம்!

"நெஞ்சுக்கு நீதி"யில் கலைஞர் எழுதுகிறார்... "என்னையும் அவரையும் சிறைச்சாலை ஆறு மாத காலம் பிரித்து விட்டதை பயன்படுத்திக்கொண்டு... சிவாஜியின் மீதிருந்த பொறாமையால் அவரை வெளியேற்ற வெகுண்டெழுந்தனர்" கட்சியிலிருந்து வெளியேறினாரே தவிர அண்ணாவின் அன்பு உள்ளத்திலிருந்து அவர் வெளியேறவில்லை. எங்கள் பாசம் மிகுந்த நட்பு அந்த வெளியேற்றத்தால் வெட்டப்படவே இல்லை! அது தொடர்ந்து கொண்டேயிருந்தது.

*காட்சிகளும், நினைவுகளும் விரியும் - வீணை மைந்தன்*

# ரொரன்ரோ பல்கலைக் கழக தமிழ் இருக்கை நிதிக்காக நேரலை ஒளிபரப்பாக நடைபெறும் 'இன்னிசை வார்ப்புக்கள்'

கனடாவில் ரொரன்ரோ மாநகரில் அமைந்துள்ள ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் அமையவுள்ள தமிழ் இருக்கை நிதிக்காக நேரலை ஒளிபரப்பாக **(LIVE TELECAST ) VIBRANT HOSPITALITY GROUP** சங்கர் நல்லதம்பி அவர்களின் ஆதரவில் கனடா **CINE MEDIA** தமிழோசை வழங்கும் "இன்னிசை வார்ப்புக்கள்" என்னும் முழு நீள இசை நிகழ்ச்சி எதிர்வரும் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வை அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் தொகுத்து வழங்க, தமிழ்நாட்டில் பிரபலங்களாகத் திகழும் பாடக பாடகிகள் மற்றும் வாத்தியக் கலைஞர்கள் மற்றும் இலக்கியவாதிகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

மேற்படி அற்புதமான இசை மற்றும் நடன விழாவைக் கண்டு களித்து பின்னர் தமிழ் இருக்கைக்கு உங்கள் நன்கொடைகளை வழங்கும் முகமாக விளம்பரப் பிரசுரத்தில் காணப்படும் நேரலை ஒளிபரப்பாக **(LIVE TELECAST)** செய்யவுள்ள தொலைக்காட்சிகள் மற்றும் ஊடகங்கள் ஆகியவற்றின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி பல்கலைக் கழகத்தில் அமையவுள்ள தமிழ் இருக்கைக்கு நமது தமிழர் சமூகம் வழங்கவேண்டிய தொகை 3 மில்லியன் டாலர்கள். மொத்தத் தொகையில் கிட்டததட்ட 80 வீதமான பணம் வெற்றிகரமாக திரட்டப்பட்டுள்ளது. மிகுதி 20 வீதத்தையும் திரட்டும் வகையில் ரொரன்ரோ தமிழ் இருக்கைக்கான குழு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. எனவே இந்த நற்காரியத்திற்கு நல்லெண்ணம் கொண்ட அனைவரும் திரண்டு வந்து நிதி பெருகி அந்த 3 மில்லியன் டாலர்கள் இலக்கை அடைவதற்கு கரங்கோர்க்கும் படி மேற்படி தமிழ் இருக்கை குழு அழைக்கின்றது. **தொலைபேசி இலக்கம்: (416) 707-9104**



# இவ்வார ராசிபலன்

**12-02-2021 வெள்ளி தொடக்கம் 18-02-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** தகுதியோடு வலம் வரக்கூடிய மிகுதியான வாரம். வெகுதி பெருகும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். உத்தியோகம் இடமாற்றம் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. திடீர் செலவு ஏற்படும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்திரபகவான். அதிர்ஷ்ட எண்: 6,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**ரிஷபம்:** சினத்தைத் தவிர்த்து பணத்தை சேர்க்கக் கூடிய பக்குவமான வாரம். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் தேவைகள் அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். விமங்கள செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நிதானம் நல்லது.
வழிபடவேண்டிய தெய்வம்: வீர விநாயகர். அதிர்ஷ்ட எண்: 9,6,4,7
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,H




**மிதுனம்:** முடியாத விஷயங்களைத் தெளிவாகச் செய்து காட்டக்கூடிய முன்னேற்றமான வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். மனைவி-யால் மருத்துவச் செலவு உண்டு. புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: பாதாள பைரவர். அதிர்ஷ்ட எண்: 5,0,5,4
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




**கடகம்:** நாட்டுல உள்ளவங்க நடுநிலையோடு பாராட்டக் கூடிய நியாயமான வாரம். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச் செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வீர அனுமன். அதிர்ஷ்ட எண்: 8,5,1,3
அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L




**சிம்மம்:** கச்சிதமான நன்மைகள் நிச்சயமாகக் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளா-தாரம் உயரும். முதலீடு உண்டாகும். தொலை தூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசு கரையாது. நினைத்தது நடக்கும். அதிதேவதை வழிபாட்டால் ஐஸ்வர்யம் கூடும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செலவுகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர். அதிர்ஷ்ட எண்: 2,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q




**கன்னி:** அருளும், பொருளும் சேரக்கூடிய ஆறுதலான வாரம். மகிழ்ச்சி அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராமபிரான். அதிர்ஷ்ட எண்: 0,7,2,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,X




**துலாம்:** பாசமும், நேசமும் பெருகக்கூடிய பக்குவமான வாரம். தங்க நகைகள் சேரும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்கள் கவனம் தேவை. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பிரார்த்தனையால் பலன் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: குரு பகவான். அதிர்ஷ்ட எண்: 2,1,0,8
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,D




**விருச்சிகம்:** செல்வமும் புகழும் சேர்ந்து கிடைக்கக்கூடிய சிறப்பான வாரம். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். உடல் நலம் சீராகும். மற்றவரால் பாராட்டுப்படுவீர்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புகள் கூடும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஐங்கரன். அதிர்ஷ்ட எண்: 1,2,6,9
அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,N




**தனுசு:** அறிமுகம் இல்லாதவர் மூலமாக ஆதாயம் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். குதூகலப் பயணம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிக்கும் சம்பவம் அமையும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். தொழில் நிம்மதி கொடுக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். நல்வர் நட்பு உருவாகும். தோல்வி நிலை மாறும் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குபேர பகவான். அதிர்ஷ்ட எண்: 7,4,6,9
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** திடமான முடிவுகளைத் தீர்மானிக்கக் கூடிய அற்புதமான வாரம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கௌரமான வாரம். பணப்பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி. அதிர்ஷ்ட எண்: 8,6,2,9
அதிர்ஷ்ட நிறம்: வைலட். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,O




**கும்பம்:** சுமையான வாழ்க்கை சுகமாக மாறக்கூடிய மகத்தான வாரம். முத்தான வாய்ப்புகள் பெருகும். பிள்ளைகாளல் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். கௌ-ரவமான வாரம். கலைத் தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிட தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: காரியசித்தி அனுமந்தசுவாமி. அதிர்ஷ்ட எண்: 1,3,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**மீனம்:** பரபரப்பாக செயல்பட்டு பணவரரை சேர்த்துக்கொள்ளக் கூடிய பக்குவமான வாரம். நட்டம் இல்லாத நாள். பட்டம் பதவி வந்து சேரும். யோகமான வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,2,0,7
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,T

- - - - - - - - - - - - - - - - - - - - -

# தாய் மண் மடல்கள்

*- முல்லை அமுதன்*

*அம்மா இருந்தவரை மடல்கள் வரும்,*
*அன்பைச் சுமந்தபடி..*
*பிறகு,*
*பாசத்தை தெரிவித்தபடி ஒருகடிதம்..*
*அதுவும் போய்*
*யுத்தம் தின்ற பூமியிலிருந்தென*
*உறவுசொல்லி மடல்கள் வரும்..*
*இப்போது,*
*நண்பர்களைப் பற்றிக் கேட்டிருப்பேன்.*
*கோயிலைப்பற்றி விசாரித்திருப்பேன்.*
*அந்நாட்களில்*
*நான் சுற்றிவந்த அல்லது என்னைச் சுற்றிவந்த*
*பெண்களைப் பற்றிய செய்தியும்*
*அவர்களுக்கு எரிச்சலைத் தந்திருக்கவேண்டும்.*
*பெரும்பாலும்,*
*என் மீதான எரிச்சலா அல்லது*
*மடல்களில் உறங்கும் எனது கேள்விகள் மீதா??*
*நண்பன்*
*தன் அனுபவத்தைச் சொல்லிச் சென்றான்.*
*புரிகிறது மெதுவாய்...*
*நான் அனுப்பும்*
*மடல்களுடன் வரைவோலை இல்லை என்பதே..*

10/02/2021


YOUR SUCCESS IS OUR BUSINESS
செந்தியின்... தமிழன் வழிகாட்டி
Tamils' Guide
DIRECTORY
ONLINE
APPS
YOUR SUCCESS IS OUR BUSINESS
www.tamilsguide.com
info@tamilsguide.com | 416-615-4646


Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0% முதல் 1.5% வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் -
உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

அறிமுகம்...

# கல்கியின் பொன்னியின் செல்வன்

தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை மாதினி நிமலன

*சென்ற வார தொடர்ச்சி...*

நூலின் ஆசிரியர் பொன்னியின் செல்வன் எனும் புதிர் போட்டு, எமை சோழராட்சியத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு எமை வாழவைத்து, புதிய அனுபவங்களைப் பெற்றுத்தந்தார் என்றே கூறலாம். அத்தனையும் தாண்டி இந்நூலில் சில உண்மைச் சம்பவங்கள் இன்று பல ஆதாரங்களைத் தேடிச்செல்ல வைக்கிறது. அலைகடல் நடுவில் பலகலம் செலுத்திச் சென்று போர் புரிந்து, வர்த்தகம் செய்து தன் புகழை உலகெங்கும் நிலைகொள்ள வைத்தான் சோழன். இந்தத் தமிழன் உழைப்பினாலும், இதை எழுதிய கல்கி ஆசிரியரின் நோக்கத்தினாலும் இன்று தமிழன் உலகப் பார்வைக்கு வைக்கப்பட்டுவிட்டான். இதனால் உலகெங்கும் தமிழ் மொழியும், தமிழ் மரபும், தமிழன் பெருமையின் சிறப்பும் விசாலமாகிக் கொண்டே போகிறது. சோழப்பேரரசின் நேர்மையின் மகத்துவம், பரிவின் வெளிப்பாடு, உழைப்பின் வலிமை, அறிவின் உச்சம், வீரத்தின் ஆழம் யாவுமே அப் பேரரசை பொற்காலம் எனப் போற்றக் காரணமாயிற்று. அழிந்து போன மாபெரும் மன்னன் ராஜராஜ சோழனின் உடலை இன்னும் தேடுகிறார்கள். அழிந்து போன வரலாற்றைத் தேடி எடுத்து நாம் பெருமை சொல்லத் துணிகிறோம். ஆனால் நாம் வரலாறு படைக்க மறுக்கிறோம். வரலாறு படைப்போம் எனும் நம்பிக்கையுடன், பொன்னியின் செல்வன் எனும் இந் நாவலின் பெருமைக்கும், சிறப்பிற்குமுரிய காரணங்கள் யாதென நோக்கின்,

## கதாபாத்திரங்கள்:

ஓர் கதையை அலங்கரிப்பது கதாபாத்திரமே. அந்த வகையில் இக்கதையின் கதாபாத்திரங்களை நோக்கின், சில உண்மைக் கதாபாத்திரங்களையும், சில கற்பனைக் கதாபாத்திரங்களையும் அமைத்து கதையை அற்புதமாக ஆசிரியர் நகர்த்துகிறார். கி.பி 847 தொடக்கம் கி.பி 871 வரை பல்லவர்களும், பாண்டியர்களும் பலமாக இருந்த காலத்தில் அவர்களை வென்று சோழர்களின் பொற்கால ஆட்சியைத் தோற்றுவித்தான் விஜயாலய சோழன். அவன் மகன் ஆதித்த சோழன் பல்லவர்களையும், கொங்கு நாட்டையும் வென்று சோழப் பேரரசை உருவாக்கினான். அவன் மகன் பராந்தக சோழன் காலத்தில் ஈழத்திலும் பாண்டி நாட்டிலும் வெற்றி பெற்று சோழப் பேரரசு விரிவுபெற்றது. பராந்தக சோழனுக்கு 3 மகன்மார் அவர்கள் முறையே ராஜாதித்தர், கண்டராதித்தர், அரிஞ்செய சோழன். கண்டராதித்தியரின் மனைவி செம்பியன் மாதவி, மகன் சேந்தன் அமுதன், வளர்ப்பு மகன் மதுராந்தகன். அரிஞ்செய சோழனின் மகன் சுந்தரசோழன் அவன் மனைவி வானமாதேவி, இவர்களது மகன்மார், ஆதித்த கரிகாலன், அருள்மொழி வர்மன், மகள் குந்தவை தேவி இது சோழ ராஜ வம்சம். தஞ்சை அமைச்சரவைக் கதாபாத்திரங்கள், பெரிய பழு வேட்டரையரான கண்டர் அமுதனார் தனாதிகாரி, அவர் மனைவி நந்தினி, சின்னப்பழு வேட்டரையரான காலாந்தககண்டர் கோட்டைத் தளபதி, அநிருத்தபிரமராயர் முதல் மந்திரி, ஆழ்வார்க்கடியான் நம்பித்திருமலை ஒற்றர். **குறுநில மன்னர்கள்:** பூரிவாக்கிரமகேசரி, மலையமான் சம்புவரையர், பூரிவாக்கிரமகேசரியின் மகள் வானதி குந்தவையின் தோழி, மலையமான் சம்புவரையரின் மகன் கந்தமாறன், மகள் மணிமேகலை. **கோடிக்கரை படகோட்டிக் குடும்பம்:** தியாகவிடகர் பூங்குழலி, முருகையன் அவன் மனைவி ராக்கம்மா. **நண்பர்கள்:** வந்தியத்தேவன். (அருள்மொழிவர்மன், ஆதித்தகரிகாலன், கந்தமாறன் ஆகியோரின் நண்பன்) பாத்திவேந்திரன் இவன் ஆதித்தகரிகாலனின் நண்பன். **பாண்டிய ஆபத்து உதவிகள்:** தேவராளன், மந்திரவாதி ரவிதாசன், இடும்பன்காரி, சோமன் சாம்பவன். **ஏனைய பாத்திரங்கள்:** கருத்திருமன், பாண்டிய இளவல், தேவராமகிராமவிருத்தன், வ ீரபாண்டியன், மந்தாகினி இவள் சுந்தர சோழனின் காதலி, புத்தபிக்கு இலங்கை, குடம்பைச் சோதிடர், தினகபாணி வைத்தியரின் மகன். இத்தகைய கதாபாத்திரங்களுக்கு உயிர் கொடுத்து உண்மைச் சோழ தேசத்தில் நாவலூடாக எம்மை வாழ வைத்த பெருமை கல்கியைச் சாரும் என்றால் அது மிகையாகாது.

**கதைக் களமாக** பழையாறை, தஞ்சை, குடந்தை, பழுவூர், மாதோட்டம், நாகபட்டினம், பூதத்த ீவு ஆகிய இடங்கள் விளங்குகின்றது.

கல்கி தன் கதாபாத்திரங்களை அறிமுகம் செய்யும் முறை வியக்கத் தக்கதாகும். இதற்கு ஆதாரமாக அநிருத்தர் எனும் கதாபாத்திரத்தை அறிமுகம் செய்யும் போது, அன்பின் அநிருத்தர் என்றழைக்கும் முதல் மந்திரி அநிருத்தர்தான் கழுகுப் பார்வையுள்ள மனிதர் அவர் புறக்கண்களினால் பார்ப்பதைத் தவிர எதிரேயுள்ளவர்களின் நெஞ்சிலும் ஊடுருவிப் பார்த்து அவர்களுடைய அந்தரங்க எண்ணங்களையும் அறியும் ஆற்றல் படைத்தவர். அவருக்கு எவ்வளவு தெரியும் - எவ்வளவு தெரியாது அவரிடம் எதைச் சொல்லலாம் எதைச் சொல்லாமல் விடலாம் என்பதைப் பற்றி இளைய பிராட்டிக்கு ஒரே குழப்பமாயிருந்தது. விவேகமும், நீதி தவறாத பண்பும் கொண்ட அநிருத்தரிடம் தன் பேச்சுக்களுக்காக தன்னை தயார் செய்கிறாள்.----- என ஒவ்வொரு கதாபாத்திரங்களினதும் தன்மையையும், சிறப்பினையும் மனதில் பதியும் வண்ணம் அறிமுகம் செய்வதுடன், **இயற்கை அழகைப்** பற்றி கூறும் போது, குடகு நாட்டில் பிறந்து வளர்ந்த பொன்னி நதி கன்னிப் பருவம் கடந்ததும் தன் மணாளனாகிய சமுத்திர ராஜனிடம் சென்றடைய விரும்பினாள். காடும் மேடும் கடந்து பாறைகளையும் பள்ளங்களையும் தாண்டிக் கொண்டு விரைந்து சென்றாள். சமுத்திர ராஜனை நெருங்க, நெருங்க நாயகனைக் காணப் போகிறோம் என்ற குதூகலத்தினால் அவள் உள்ளம் விம்மி உடல் பூரித்தது------- இவ்வாறாக கன்னிப் பெண் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துவது போல நதியை வர்ணித்துச் செல்வது அழகிற்கு அழகு சேர்க்கிறது. கல்கி தன் கதையில் சொல்ல வரும் விடயத்தை அழகு தமிழிழாலும், எழுத்தின் வலிமையினாலும் அந்தந்த சூழ்நிலையை உயிரோட்டமாக உருவாக்கியுள்ளமை இந்த நாவலுக்கு மகுடமாக அமைகிறது.

**உண்மைச் சம்பவங்களை** உள்ளடக்கிக் கூறும் போது அதற்குத் தஞ்சைக் கோவிலிலுள்ள ஆதாரங்கள் அடிப்படையாக அமைகின்றது. (வர்ணகுலத்து வானவரான வந்தியத்தேவன் குந்தி தேவியின் நாயகனாவான் என்று கல்வெட்டுக் கூறுகிறது) வந்தியத்தேவனதும், குந்தி தேவியினதும் உறவு முறையை கல்கி தன் கற்பனையில் எப்படி விபரிக்கிறார் எனப் பார்ப்போம். இதில் இளவரசி ஒரு கணம் சிறையிலிருக்கும் வந்தியத் தேவனை தன் மலர்ந்த கண்களினால் உற்றுப் பார்த்துவிட்டு 'ஐயா நீர் கெட்டிக்காரர் அதிலும் சிறையிலிருந்து தப்பிச் செல்வதில் மிகக் கெட்டிக்காரர். பழு வேட்டரையரின் பொக்கிக்ஷ நிலவறையிலிருந்து தப்பிச் சென்றவருக்கு இது ஒரு பிரமாதமா?' என்றாள். 'அப்படியானால் நீங்களே கதவைத் திறந்து என்னை விடுதலை செய்யுங்கள்' என்றான் வந்தியத்தேவன். அதற்கு குந்தவை, 'நானே இந்தச் சிறையைத் திறந்து விடலாம் அல்லது நீரும் தப்பிச் செல்லலாம் ஆனால் இன்னொரு சிறைச் சாலையிலிருந்து நீர் தப்ப முடியாது' என்கிறாள். அதற்கு வந்தியத்தேவன் 'பின்னே எந்தச் சிறையைச் சொல்லுகிறீர்கள்?' என வினவ குந்தவையோ 'என்னுடைய இதயமாகிற சிறைச் சாலையைத்தான் சொல்கிறேன்' என்கிறாள். தொடர்ந்து செல்லும் இந்த உரையாடலில் அவர்கள் காதலின் உச்சத்தை நயம்பட வெளிப்படுத்த ஆசிரியர் தன் கற்பனை வெள்ளத்தை எவ்வாறு ஓடவிட்டிருக்கிறார் என்பது புலனாகிறது.

இவற்றுடன் இதில் வரும் **நகைச் சுவையை** நோக்கின், பூனை ஒன்று மரத்தின் மேலுள்ள குருவிக் கூட்டைக் கலைத்து குருவிகளைக் கொன்று தின்ன எத்தனித்தது. அதைக்கண்ட குந்தவையின் தோழி வானதி கூச்சலிடுகிறாள். இதைக் கேட்ட வாலிபன் ஒருவன் யானையில் வந்து அதைக் காப்பாற்றுகிறான். அந்த வாலிபனைப் பார்த்து வானதி சிரிக்கிறாள். ஏன் சிரித்தாய் என வாலிபன் கேட்ட போது அதற்கு வானதி 'ஒன்றுமில்லை நீ பெரிய வீரனாயிருக்கிறாயே என்று எண்ணிச் சிரித்தேன். பூனையோடு சண்டை போடுவதற்கு யானையின் பேரில் வந்தாய் அல்லவா?' என்று கேட்டாள் அதைக் கேட்டு வாலபனும் சிரித்தான். 'பெண்ணே அது பூனைதானா? நீ போட்ட கூக்குரலைக் கேட்டு புலியோ என்று பயந்துவிட்டேன்' என்று சொன்னான். அந்த வாலிபன் பொன்னியின் செல்வன் என்பதனை வானதி அறியாள். இதைப் போல் பல இடங்களிலும் நகைச் சுவை உரையாடல்கள் இழையோடிக் காணப்படுகின்றது.




இவ்வாறாக புதுமையான நூலின் தலைப்பு, காத்திரமான கதையின் கருப்பொருள், ஆசிரியரின் உள்நோக்கு, உண்மைச் சம்பவங்களின் உள்ளடக்கம், நூலில் கையாளப்படும் தமிழ் நடையின் தரம், இயற்கையை வர்ணிக்கும் விதம், நகைச்சுவை உணர்வின் நிறைவு, கதைக் களத்தின் விசித்திரம், கதாபாத்திரங்களின் கட்டமைப்பு என இவை யாவும் பொன்னியின் செல்வனில் தாராளமாக புரையோடிக்காணப்படுகின்றது.

பொன்னியின் செல்வன் எனும் நாவலின் கதைத் தொகுப்பு யாதெனப் பார்ப்போம். கி.பி 847 தொடக்கம் கி.பி 871ல் விஜயாலய சோழன் எனும் மன்னன் சோழராட்சியைத் தோற்றுவித்தான். பின்னர் இவன் மகனான பராந்தகன் (907-955) சோழ தேசத்தை விரிவுபடுத்தினான். இப்படியாக இந்தச் சோழ அரசு அன்று புகழ் பூத்து செழிப்பாய் விளங்கியது. பராந்தக சோழனின் மகன் அரிஞ்செய சோழன். இவனின் மகன் சுந்தரசோழன். சுந்தரசோழன் அந்த நாட்களில் முடிசூடிய மன்னாக ஆட்சி புரிந்தான். இவனின் மகனான ஆதித்த கரிகாலன் அன்று வடதிசையின் பட்டத்து அரசனாக விளங்கினான். இவன் தனது நண்பனாகிய வந்தியத்தேவனிடம் தன் தந்தைக்கும், தங்கைக்கும் ஓலை கொண்டு செல்லுமாறு கூறி தஞ்சைக்கு அனுப்பினான். வீர நெஞ்சமுடைய வந்தியத்தேவன் குதிரைமேல் ஏறி சரித்திரப் புகழ் பெற்ற வீர நாராயணன் ஏரி வழியாக தன் குதிரையில் தஞ்சை நோக்கி வருகிறான். வியக்கும் இயற்கை அழகைக் கண்டு குதூகலமாக அவன் பயணம் தொடர்கிறது. பிராயாணக் குதூகலத்தில் புதினம் அறிய முயன்று வீதியின் கூட்டத்தில் புகுந்த போது வீர வைகூஷ்ணவ ஆழ்வார்கடியாரைச் சந்திக்க நேர்கிறது. பெரியபழுவேட்டரையரும், சில சிற்றரசர்களும் கடம்பூரில் கூடுகிறார்கள் என்ற செய்தியை ஆழ்வார்க்கடியான் சொல்ல, வந்தியத்தேவனுக்கு நண்பன் கந்தமாறன் நினைவிற்கு வர, கடம்பூர் அரண்மனைக்குச் செல்ல எண்ணினான். அங்கு தன் நண்பனைச் சந்தித்து கட்டித் தழுவினான். வீரத்தின் தலைவன் என்று போற்றப்படும் பெரியபழுவேட்டரையரான கண்டன் அமுதனைக் கண்டு புழகாகிதம் கொண்டதுடன் உடலிலுள்ள எண்ணற்ற விழுப்புண்களைக் கண்டு திகைப்படைந்தான். அத்துடன் காணக்கரிய காட்சியாக பல சிற்றரசர்களையும், மாளிகை மாதுக்களையும் கண்டு மகிழ்ந்ததுடன், சோழ தேசத்திற்கு வரவிருக்கும் பெரும் ஆபத்தையும், நடைபெற இருக்கும் சூழ்ச்சியையும் தெரிந்து கொண்டு தஞ்சை நோக்கிப் புறப்பட்டான்.

*(தொடர்ச்சி அடுத்த வாரம்)*

உடல் எடையை / பருமனை உடன் குறைக்க வேண்டுமா






★ இந்தத் தயாரிப்பானது உங்கள் உடலில் உள்ள கொழுப்பைக் குறைத்து அணுக்களை புதுப்பித்து உடலை இறுக்கப்படுத்தி அழகுடன் புத்துணர்ச்சி பெறுவதை 3 நாட்களில் நீங்கள் உணர்வீர்கள்.

★ பக்க விளைவுகளை ஏற்படுத்தாத இயற்கை தானியங்களினால் தயாரிக்கப்பட்டவை (விற்றமின்ஸ் - Based on science). இதனைப் பாவிப்பதன் மூலம் இடை குறைந்து அழகுறப் பெற்று உடல் எடையும் குறைந்து இளமைத் தோற்றத்தைப் பெறுவீர்.

★ இத்தயாரிப்பானது 100% இயற்கையானதும் பாதுகாப்பானதும். மேலும் மனித உணவுப் பொருட்களில் பயன்படுத்த அரசாங்கம் ஒப்புதல் அழித்துள்ளது. இதனைப் பாவிப்பதன் மூலம் நீங்கள் மூட்டுவலி, முகப்பரு, ஒற்றைத் தலைவலி மற்றும் தலைவலி போன்ற ஏனைய நோய்களிலிருந்தும் விடுபடுவீர்கள்.



This product helped naturally to remove all fat and replace the cell and tight your body you can see the change in your body within 3 days, it will enhance your energy. Additionally, all of the flavor components are 100% natural safe, and government approved for use in human food products BY doing this weight loss, you will also heal all other diseases, JOIN PAIN, ACNE. migraine/ Headache.

மேலும் விளக்கம் தேவைப்படின் அழையுங்கள்

416-875-1340

www.Gr2.control.com www.Gr2.control.com

# கனடா உதயன்

uthayannews.ca 25th Anniversary

## வெள்ளி விழா ஆண்டு 2021

உலகளாவிய மாணவர்களுக்கான இணையவழி ஊடான

# பேச்சுப் போட்டி

POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES

Shankar Nallathamby, CHA
Director
shankar@vhgcanada.com
www.vibranthospitalitygroup.com
Toll free: 1 888 674 7770 | Local: 905 769 1509

## நான் விரும்பும் அரசியல் தலைவர்

இங்கு காணப்படும் தமிழ்த் தலைவர்களிலிருந்து தங்களுக்கு பிடித்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி **5 நிமிடங்களுக்கு** மேற்படாமல் பேச வேண்டும். போட்டி **ZOOM** செயலியூடாக **பெப்ரவரி 27. 28 தினங்களில்** நடைபெறும். கனடா, இந்தியா, அமெரிக்கா, மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நடுவர்கள் வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். இவர்களோடு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சேர்ந்து எடுக்கும் இறுதி முடிவிற்கு ஏற்பவே பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



## நிபந்தனைகள்

1. உலகின் எப்பாகத்திலும் வாழும் 20 வயதிற்கு உட்பட்ட தமிழ் பேசும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் (வயதை உறுதிப்படுத்தும் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

2. இங்கு காணப்படும் தலைவர்களில் தாம் விரும்பும் ஒருவரைப் பற்றி மட்டும் ஐந்து நிமிடத்திற்கு மேற்படாமல் பேசவேண்டும்
3. போட்டிக்கான உரையை அவர்களாகவோ அன்றி மற்றவர்களின் உதவியுடனோ தயாரிக்கலாம்.

4. இறுதிப் போட்டிக்கு முன்பதாக தேவையேற்படின் முதற்சுற்றுப் ரேபட்டியில் பங்குபற்றவும் தயாராக இருக்க வேண்டும்.

5. போட்டி இடம்பெறும் இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் போட்டியில் பங்கு பற்ற தயாராக இருக்க வேண்டும்.

6. பேச்சுப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் பின்வரும் விபரங்களை uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சலுக்கோ அன்றி 1 (416) 732 1608 / 1 (416) 587 0552 என்னும் இலக்கத்தில் WhatsApp இற்கோ அனுப்பி வைக்க வேண்டும்.
மாணவரின் முழுப் பெயர், மாணவரின் வயது, கல்வி கற்கும் பாடசாலை அல்லது பல்கலைக் கழகம், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் விலாசம்:-
(பெற்றோர் அல்லது பாதுகாவலர் விபரங்களும் இணைக்கப்படலாம்)

7. விபரங்கள் எமக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் பெப்ரவரி 12, 2021 வெள்ளிக்கிழமையாகும். அந்த திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. பரிசு பெறும் மாணவர்களுக்கு பணத்தொகையும் சான்றிதழ்களும் நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது வங்கி கணக்கு ஊடாகவோ அனுப்பி வைக்கப்படும்.

## பரிசுகள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு | ஐந்து ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|
| 300 கனடிய டொலர்கள் | 200 கனடிய டொலர்கள் | 100 கனடிய டொலர்கள் | 50 கனடிய டொலர்கள் |

### ZOOM பெப்ரவரி 27, 2021 சனிக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 812 3636 6126 | Passcode: 962261**

### ZOOM பெப்ரவரி 28, 2021 ஞாயிற்றுக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 827 6566 9766 | Passcode: 892482**

### நடுவர்கள்:

பேராசிரியர் சங்கர நாராயணன் (தமிழ்நாடு) | வழக்கறிஞர் தி. இராமகிருஷ்ணன் (தமிழ்நாடு)
கலாநிதி நல்லையா குமரகுருபரன் (இலங்கை) | திரு. ஆர். சர்வேஸ்வரா (இலங்கை)
திரு. குயின்ரஸ் துரைசிங்கம் (கனடா) | திரு. நிமால் விநாயகமூர்த்தி (கனடா)
திரு. வீணைமைந்தன் சண்முகராஜா (மொன்றியல் - கனடா)

சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி :
பெப்ரவரி 12, 2021
E-mail: uthayannews@yahoo.com
WhatsApp : +1 416 732 1608
+1 416 587 0552

Our Media Partners
Analai Express HD TV | East FM 102.7 தமிழ் | உலகத்தமிழர் | ஈழநாடு | ஈழமுரசு | yugam radio | MONதமிழ் | Roobam FM Toronto Digital Radio | Easy 24 News | Veet TV

PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca 416-200-5470
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha Electical,Plumbing and drainage service Residential Commercial and industrial All Repairs & Renovations

Santha Plumbing and drainage service
Tel : 416 200 5470
info@santha.ca
www.santha.ca
Santha Panchalingam

CAMSONICS
SECURITY SYSTEMS.INC
NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS

FULL HD
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD
Rajeev Sebarasha :- 647.302. 5748
Web: www.camsonics.com E-Mail: camsonics@gmail.com 1 888 723 5747

FRUITS HABY
மொன்றியல் மாநகரில்
பசுமையான மரக்கறி வகைகள்
மற்றும் பழவகைகளுக்கு
புகழ்பெற்ற தமிழர்
மளிகை மாளிகை
5925 Victoria Ave, Montreal, QC H3W 2R9

HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE*

For all your Real Estate needs...
Buyers and Sellers - I will pay your Lawyer Fees and Moving Charges!"
VALLIKKANNAN MARUTHAPPAN Sales Representative
Direct: 416-880-6051 Bus: 416-298-3200
www.mvkhome.ca

வீடு விற்க! வாங்க
Award winning Agents will give you Professional, Reliable and Friendly Services
We can arrange Mortgage, Second Mortgage and Refinance.
ROYALAN TEAM
" Our clients are our value"

Ragu Thillainathan 416-629-5800
Kailain Thillainathan 647-668-8276
kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com

வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
RE/MAX ACE REALTY INC. BROKERAGE

Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# ஈழத்துத் திருக்கோவில்கள் 933



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் *B.A.,*
(416)332-0269 vasantha@rogers.com



## தம்பலகமம், ஆதிகோணநாயகர் கோயில்
## திருகோணமலை

"தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினு மனத்து மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே."

ஈழவளநாட்டிலே, கிழக்குமாகாணத்தில் அமைந்திருக்கும் சிவனுக்குரிய திருக்கோயிலாக, வரலாற்றுப் பெருமை மிக்க திருக்கோணேஸ்வரம் விளங்குகின்றது. திருக்கோணேஸ்வர வரலாற்றோடு தொடர்புடைய கோயில்கள் பல திருகோணமலையிலும், அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் காணப்படுகின்றன. இவற்றுள் ஒரு காலகட்டத்தில். திருகோணேஸ்வரத்தில் எழுந்தருளியிருந்த கோணநாயகர், அன்னியரின் ஆதிக்கத்தின் விளைவாக, அழிவினின்றும் பாதுகாக்கப்பட்டு, எழுந்தருளியுள்ள பிரதேசமாகத் தம்பலகமம் என்னும் அழகிய கிராமம் விளங்குகின்றது. இக்கிராமம், தென்னஞ்சோலைகள் சூழ்ந்த இயற்கை அழகுப் பொலிவோடு, வற்றாத நீர்வளத்தைக் கொண்டு, சோழநாடு சோறுடைத்து என்பது போல, தம்பலகமம் பிரதேசமும், செந்நெற் கழனிகள் சூழ்ந்த சைவப்பெருமக்கள் வாழ்கின்ற அழகிய கிராமமாக மிளிர்கின்றது. திருகோணமலைப் பட்டணத்திலிருந்து கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில், இருபத்துநாலு கிலோமீற்றர் தூரத்தில் ஒரு கிளைப்பாதை பிரிகின்றது. அங்கிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தம்பலகமம் கிராமத்தில், ஆதிகோணநாயகர் கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் வரலாறு பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றாகிய திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றோடும், மரபுகளோடும் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றது.

ஆதிகோணநாயகர் ஆலய வரலாற்றை அறிவதற்கு உறுதுணையாகவுள்ள, திருக்கோணேஸ்வரம் வரலாற்றின் சில செய்திகளைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும். திருகோணமலை திருக்கோணஸ்வரத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி செய்த பெருமான், காலநியதிக்கேற்க ஆதிகோணநாயகர் என்னும் திருப்பெயரோடு, தம்பலகமம் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் வரலாறு, தொன்மைச் சிறப்புடையதாகக் காணப்படுகின்றது. இக்காரணத்தினாலேயே ஸ்ரீ ஆதிகோணநாயகர் என்பதிலுள்ள ஆதி என்னும் சொல் திருக்கோணேஸ்வரத்தைச் சுட்டுவதாகவே அமைந்துள்ளது. மகாமேரு மலையின் சிகரங்களிலொன்றாகத் திருக்கோணேஸ்வரத்தைப் புராணங்கள் விபரித்துள்ளன. கிறிஸ்து பிறப்பதற்கு 1300 ஆண்டுகளுக்கு முன் கோணேசர் ஆலயம் கட்டப்பட்டது. அதாவது இற்றைக்கு ஏறக்குறைய 3000 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றை உடையது திருக்கோணேஸ்வரம். புத்தபகவான் பிறப்பதற்கு சுமார் 800 ஆண்டுகளுக்கு முன் இவ்வாலயம் கட்டப்பட்டது. இத்தகவல்கள் போத்துக்கீசரால் அழிக்கப்பட்ட கோணேசர் கோயில் கற்தூண்களில் உள்ள கல்வெட்டுக்களில் காணப்பட்ட செய்தியாகும். குவைரோஸ் பாதிரியார் எழுதிய "கொன்குவிஸ்ரா" என்ற நூலில் இச் செய்திகள் காணப்படுகின்றன. இக்குறிப்பினை கலாநிதி போல் ஈ.பீரிசின் பதிப்பிலும் காணக்கூடியதாயுள்ளது.

போத்துக்கல் நாட்டில் லிஸ்பனில் அமைந்துள்ள அஜூடா நூலகத்திலுள்ள சுவடிகளில், பின்வரும் செய்திகள் காணப்படுகின்றன. மனுராசா அல்லது மாணிக்கராசா என்னும் மன்னன் இலங்கையை ஆண்டதாகவும், அவன் கி.மு 1300 ஆம் ஆண்டு கோணசர் கோயிலைக் கட்டினான் என்று கூறப்பட்டுள்ளது. இத்தகவல் றோயல் ஏசியாட்டிக் சொசைட்டி வெளியீட்டுத் தொகுதியில் காணப்படுகின்றது.

இலங்கையை ஆண்ட மன்னன் இராவணன் திருக்கோணேசர் கோயிலோடு கொண்டுள்ள தொடர்புகளைப் புராண, இதிகாச வரலாறுகள் மூலம் அறியலாம். இந்துக்களின் மகரிஷிகளில் ஒருவராகிய அகத்தியமுனிவர் கோணேஸ்வரத்தை வழிபட்ட குறிப்புக்கள், அகத்தியரின் புராண வரலாறுகளிலே புதைந்து கிடக்கின்றது. அகத்தியரின் வரலாற்றை ஆராய்ந்த வரலாற்றாசிரியர்களின் குறிப்பின்படி, அகத்தியர் காலம் கி.மு 1000 ஆண்டுகட்கு முற்பட்டதாகக் காணப்படுகின்றது.

திருகோணமலையில் பிரடெரிக்கோட்டை வாசலின் இரு பக்கங்களிலுமுள்ள தூண்களில் பாண்டிய மன்னனுடைய இரட்டைமீன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை இன்றுங் காணலாம். பாண்டிய மன்னர்கள் 433-460 வரை அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்துள்ளார்கள். இவர்கள் ஆட்சிக்காலத்தில் மனுநீதிகண்ட சோழனின் மகனாகிய குளக்கோட்டு மன்னன் திருகோணமலைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்துள்ளதாக யாழ்ப்பாண வைபவமாலையிலே கூறப்பட்டுள்ளது. குளக்கோட்டு மன்னனின் புனருத்தாரணப் பணிக்குச் சான்றாகப் பிரடெரிக்கோட்டை வாசலிலுள்ள கல்வெட்டுப்பாடல் சான்றாகக் காணப்படுகின்றது. இவையாவும் திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையை எடுத்துக் காட்டுவனவாகக் காணப்படுகின்றன.

இத்தகைய வரலற்றுப்புகழ்மிக்க திருக்கோணேஸ்வரத்தை கி.பி 1624ஆம் ஆண்டு, போத்துக்கேய தளபதியாகிய கொன்ஸ்ரன்ரைன் டீசா என்பவனுடைய தலைமையிலான படைகள் இடித்தழித்தார்கள். இவ்வேளையில், கோயில் விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு நாலாபக்கங்களிலும் ஓடிய பக்தர்கள் திருவுருவங்களைக் கிணறு, குளங்களில் போட்டும், நிலத்திலே புதைத்தும் மறைத்தும் வைத்தார்கள். ஆனால், இருபாகை முதன்மைக் குருக்களிற் சிலரும், தானத்தாரும், வரிப்பத்தாரும் சில விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு, தம்பலகமத்திற்கு மேற்கேயுள்ள சுவாமிமலை என்ற இடத்தில் ஒளித்து வைத்தார்கள். தம்பகமம் வாசிகளிற் சிலர் கிழங்கெடுக்கச் சென்ற சமயம், சுவாமி மலையில் விக்கிரகத்தோடு, செப்பேடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுத் தம்பலகமத்தில் ஓர் கோயில் கட்டி, சுவாமியைப் பிரதி'டை செய்தனர்.

இதன் பின்னர் இவ்வாறு பிரதிஷ்டை செய்த மூர்த்தியை ஆதிகோணநாயகர் என்றும், அவர் எழுந்தருளியுள்ள கோவிலை ஸ்ரீ ஆதிகோணநாயகர் திருக்கோயில் என்றும் வழங்கினர். தொன்மைமிகுந்த திருக்கோணேஸ்வரத்தில் எழுந்தருளியிருந்த திருவுருவம் என்ற காரணத்தினால், ஆதிகோணநாயகர் என அழைக்கின்றனர். ஆதி என்ற இச்சொல் திருக்கோணேஸ்வரத்தின் தொன்மை வாய்ந்த மூர்த்தி என்பதைக் குறிப்பிடுவதாகக் காணப்படுகின்றது.

கி.பி 1624ஆம் ஆண்டின் பின்னர் இக்கோயில் கட்டப்படதாகக் கருதப்பட்டபோதிலும், வேறு சில கூற்றுக்களை ஆராயுமிடத்து, தம்பலகமத்திலே காணப்பட்ட ஒரு சிவாலயத்திலே, சுவாமிமலையில் கண்டெடுக்கப்பட்ட திருக்கோணேஸ்வரத் திருவுருவத்தைப் பிரதிஷடை செய்தார்கள் என்றும், அதன் பின்னர், முன்னர் வழங்கப்பட்ட பெயர் மறைந்து, ஸ்ரீ ஆதிகோணநாயகர் கோயில் என்ற பெயர் நிலைத்திருக்கலாம் என்ற கருத்தினையும், கருத்திற்கொள்ள முடிகின்றது. இதற்கு ஆதாரமாக, யாழ்ப்பாணவைபவமாலையிலே சில கருத்துக்கள் காணப்படுகின்றன. மயில்வாகனப்புலவர் எழுதிய யாழ்ப்பாணவைபவமாலையில், விஜயன் தனது ஆட்சிக்குப் பாதுகாப்பாகக் கிழக்குத் திசையில், தம்பலகமத்துக் கோணேசர் கோயிலைப் புதுப்பித்துக் கட்டுவித்து நித்ய, நைமித்தியங்கள் காலந்தவறாது நடைபெற வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 599

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

### கர்த்தாவே, வானங்கள் உம்முடைய அதிசயங்களைத் துதிக்கும்

கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன், உமது உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என்வாயி னால் அறிவிப்பேன். கிருபை என்றென்றைக்கும் ஸ்திரப்பட்டிருக்கும், உமது உண்மையை வானங்களிலே ஸ்தாபிப்பீர் என்றேன். என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கைபண்ணி, என் தாசனாகிய தாவீதை நோக்கி: என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி, தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப் பேன் என்று ஆணையிட்டேன் என்றீர். கர்த்தாவே, வானங்கள் உம்முடைய அதிசயங்களைத் துதிக்கும், பரிசுத்த வான்களின் சபையிலே உம்முடைய உண்மையும் விளங்கும். ஆகாயமண்டலத்தில் கர்த்தருக்கு நிகரானவர் யார்? பலவான்களின் புத்திரரில் கர்த்தருக்கு ஒப்பானவர் யார்? தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத்தக்கவர், தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர். சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல் வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது. தேவரீர் சமுத்திரத்தின் பெருமையை ஆளுகிறவர், அதின் அலைகள் எழும்பும்போது அவைகளை அடங்கப்பண்ணுகிறீர். நீர் ராகாபை வெட்டுண்ட ஒருவனைப்போல் நொறுக்கினீர், உமது வல்லமையான புயத்தினால் உம்முடையசத் துருக்களைச் சிதறடித்தீர். வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது, பூலோகத்தையும் அதிலுள்ள யாவை யும் நீரே அஸ்திபாரப்படுத்தினீர். வடக்கையும் தெற்கையும் நீர் உண்டாக்கினீர், தாபோரும் எர்மோனும் உம்முடைய நாமம் விளங்கக் கெம்பீரிக்கும். உமக்கு வல்லமையுள்ள புயமிருக்கிறது, உம்முடைய கரம் பராக்கிரமமுள்ளது, உம் முடைய வலதுகரம் உன்னதமானது. நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம், கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும். கெம்பீரசத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள், கர்த்தாவே, அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள். அவர்கள் உம்முடைய நாமத்தில் நாடோறும் களிகூர்ந்து, உம்முடைய நீதியால் உயர்ந்திருப்பார்கள். நீரே அவர்கள் பலத்தின் மகிமையாயிருக்கிறீர், உம்முடைய தயவினால் எங்கள் கொம்பு உயரும். **- சங்கீதம் 89: 1-17**

### என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்

கர்த்தரால் எங்கள் கேடகமும், இஸ்ரவேலின் பரிசுத்தரால் எங்களுடைய ராஜாவும் உண்டு. அப்பொழுது நீர் உம்முடைய பக்தனுக்குத் தரிசனமாகி: சகாயஞ்செய்யத்தக்க சக்தியை ஒரு சவுரியவான்மேல் வைத்து, ஜனத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவனை உயர்த்தினேன். என் தாசனாகிய தாவீதைக்கண்டு பிடித்தேன், என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம்பண்ணினேன். என் கை அவனோடே உறுதியாயிருக்கும், என் புயம் அவனைப் பலப்படுத்தும். சத்துரு அவனை நெருக்குவதில்லை, நியாயக்கேட்டின்மகன் அவனை ஒடுக்குவதில்லை. அவன் சத்துருக்களை அவனுக்கு முன்பாக மடங்கடித்து, அவனைப் பகைக்கிறவர்களை வெட்டுவேன். என் உண்மையும் என் கிருபையும் அவ னோடிருக்கும், என் நாமத்தினால் அவன் கொம்பு உயரும். அவன் கையைச் சமுத்திரத்தின் மேலும், அவன் வலது கரத்தை ஆறுகள் மேலும் ஆளும்படி வைப்பேன். அவன் என்னை நோக்கி: நீர் என் பிதா, என் தேவன், என் இரட் சிப்பின் கன்மலையென்று சொல்லுவான். நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன். என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன், என் உடன் படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும். அவன் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்திருக்கவும், அவன் ராஜாச னம் வானங்களுள்ளமட்டும் நிலைநிற்கவும் செய்வேன். அவன் பிள்ளைகள் என் நியாயங்களின்படி நடவாமல், என் வேதத்தை விட்டு விலகி, என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், என் நியமங்களை மீறிநடந்தால், அவர்கள் மீறு தலை மிலாற்றினாலும், அவர்கள் அக்கிரமத்தை வாதைகளினாலும் தண்டிப்பேன். ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும், என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன். என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதைமாற்றாமலும் இருப்பேன்.
**- சங்கீதம் 89: 18-34**

### என் ஜீவன் எவ்வளவு நிலையற்றது என்பதை நினைத்தருளும்

ஒருவிசை என் பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டேன், தாவீதுக்கு நான் பொய்சொல்லேன். அவன் சந்ததி என்றென் றைக்கும் இருக்கும், அவன் சிங்காசனம் சூரியனைப்போல எனக்கு முன்பாக நிலைநிற்கும். சந்திரனைப்போல அது என்றென்றைக்கும் உறுதியாயும், ஆகாயமண்டலத்துச் சாட்சியைப்போல் உண்மையாயும் இருக்கும் என்று விளம்பினீர். ஆனாலும் நீர் எங்களை வெறுத்துத்தள்ளிவிட்டீர், நீர் அபிஷேகம்பண்ணுவித்தவன்மேல் உக்கிரமானீர். உமது அடியானுடன் நீர் பண்ணின உடன்படிக்கையை ஒழித்துவிட்டு, அவன் கிரீடத்தைத் தரையிலே தள்ளி அவமா னப்படுத்தினீர். அவன் மதில்களையெல்லாம் தகர்த்துப்போட்டு, அவன் அரணான ஸ்தலங்களைப் பாழாக்கினீர். வழி நடக்கிற யாவரும் அவனைக் கொள்ளையிடுகிறார்கள், தன் அயலாருக்கு நிந்தையானான். அவன் சத்துருக்களின் வலதுகையை நீர் உயர்த்தி, அவன் விரோதிகள் யாவரும் சந்தோஷிக்கும்படி செய்தீர். அவன் பட்டயத்தின் கருக்கை மழுக்கிப்போட்டு, அவனை யுத்தத்தில் நிற்காதபடி செய்தீர். அவன் மகிமையை அற்றுப்போகப்பண்ணி, அவன் சிங்கா சனத்தைத் தரையிலே தள்ளினீர். அவன் வாலிபநாட்களைக் குறுக்கி, அவனை வெட்கத்தால் மூடினீர். எதுவரைக்கும் கர்த்தாவே! நீர் என்றைக்கும் மறைந்திருப்பீரோ? உமது கோபம் அக்கினியைப்போல எரியுமோ? என் ஜீவன் எவ்வளவு நிலையற்றது என்பதை நினைத்தருளும், மனுபுத்திரர்யாவரையும் வீணாகச் சிருஷ்டிக்க வேண்டியதென்ன? மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு விலக்கிவிடுகிறவன் யார்? ஆண்டவரே, நீர் தாவீதுக்கு உம்முடைய உண்மையைக்கொண்டு சத்தியம்பண்ணின உமது பூர்வ கிருபைகள் எங்கே ஆண்டவரே, உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஊழியக்காரரையும், நீர் அபிஷேகம்பண்ணினவனின் காலடிகளை யும் நிந்திக்கிறபடியினால், கர்த்தாவே, உமது அடியார் சுமக்கும் நிந்தையையும், வலுமையான ஜனங்களெல்லாரா லும் நான் என் மடியில் சுமக்கும் என் நிந்தையையும் நினைத்தருளும். கர்த்தருக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திர முண்டாவதாக. ஆமென், ஆமென். **- சங்கீதம் 89: 35-52**

*தொடரும்*



# 15ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
02-04-1926

உதிர்வு:
29-01-2006

கொழும்பைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை, மானிப்பாயை வாழ்விடமாகவும், பின்னர் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரத்துவமாது ஸ்ரீபதி மகேஸ்வரி

(தர்மகர்த்தா-புளியங்கண்டு பிள்ளையார் தேவஸ்த்தானம், முருகமூர்த்தி பிள்ளையார் தேவஸ்த்தானம்
திதி:- 12-02-2021

வார்த்தைகளே இல்லாத வடிவம்
அளவுகோளே இல்லாத அன்பு
சுயநலமே இல்லாத இதயம்
அவர்தான் எங்களின் அம்மா!

வாழ்ந்த நாட்களை வசந்தங்களாக்கி
விட்டு சென்ற வாடாமலரே-அம்மா
உதிர்ந்தது உங்கள் உயிர் மட்டுமல்ல
உடைந்தவை எங்களின் இதயங்களும் தான்

எங்கள் இதய நதியில் ஓடமாய்
உங்களின் நினைவுகள் என்றும்
ஓடிக்கொண்டே இருக்கும்
அழியாத ஓவியமாய்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com


Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca



25வது வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்


NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services


உதயம் 1297 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 12, 2021

# A Panel Discussion on Eelam Tamil's Right to Self Determination

# ஈழத் தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமை தொடர்பான இணையவழி கருத்தரங்கு





கடந்த சில வருடங்களாக ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் அந்த உ ரிமைகளை அடைவதற்கான வழிமுறைகளை உலகெங்கும் உள்ள அறிஞர்கள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆகியோரை இணைத்து செயலாற்றி வரும் ஏபிசி தமிழ் ஒலி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கருத்தரங்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் காலை 7.00 மணிக்கு இணையவழி ஊடாக ஆரம்பமானது. இந்த இணையவழி கருத்தரங்கில் முக்கிய கருப்பொருளாக எடுக்கப்பட்டது 'ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுதல்' என்பதே ஆகும்.

(உள்ளே விபரமான செய்தி 15ம் பக்கத்தில்)

# இலங்கை அரசின் போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களோடு தோளோடு தோள் நிற்க பிரம்டன் நகர சபை தயாராக உள்ளது



## மேயர் பெற்றிக் பிரவுன் உறுதியாகத் தெரிவிப்பு

"இலங்கை அரசு அரங்கேற்றிய கொடிய போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களோடு தோளோடு தோள் நின்று ஆதரவு வழங்க கனடாவின் பிரம்டன் நகர சபை எப்போது தயாராக உள்ளது. இங்கு வாழும் தமிழ் மக்கள் ஒரு வளமான சமூகமாக உள்ளது. கனடிய நீரோட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் தமிழ்ச் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வது எமது கடமை என்பதை நாம் உணர்கின்றோம்.

உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில் )



# தமிழ்நாடு 'இனிய நந்தவனம்' நிறுவனம் வழங்கிய பன்னாட்டு மாணவர்களுக்கான சாதனை விருதுகள்




தமிழ்நாட்டின் திருச்சி மாநகரிலிருந்து திரு சந்திரசேகரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "இனிய நந்தவனம்" மாத இதழ், வருடாந்தம் நடத்தும் பன்னாட்டு மாணவர்களுக்கான சாதனை விருதுகள் வழங்கும் விழா கடந்த மாதம் திருச்சி மாநகரில் சிறப்பான முறையில் நடைபெற்றது.

மேற்படி மாணவர்களுக்கான சாதனை விருதுகளைப் பெற்ற கனடா வாழ் மாணவ மாணவிகளுக்கு விருதுகளை வழங்கும் சிறிய வைபவம் கடந்த 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் ஸ்காபுறோ நகரில் எக்ளிங்டன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சீரடி சாயிபாபா ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. திருமதி நரேன்-சசிகலா தம்பதியினரும் ஆலய தொண்டர்களும் ஏற்பாடு செய்த இந்த விருதுகள் கையளிக்கும் வைபவத்தில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கலந்து கொண்டு விருதுகளை சாதனை செய்த மாணவர்களுக்கு கையளித்தார். சமூக ஆர்வலர் திரு விசு கணபதிப்பிள்ளையும் அங்கு வருகை தந்திருந்தார்.

பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என அங்கு சமூகமளித்தவர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியோடு விருதுகள் பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டிச் சென்றனர்.

# ஒன்ராறியோ அரசு கோவிட்-19 ஆபத்திலிருந்து மக்கள் மீள்வதற்காக புதிய அணுகுமுறையைக் கையாள்கிறது



ஒன்றாரியோ மாகாணத்தின் சுகாதார தலைமை மருத்துவ அதிகாரியுடன் கலந்தாலோசித்து, பணிமுடக்கம், மக்களை வீட்டில் இருக்குமாறு பணிக்கும் உத்தரவு, பொதுசுகாதார மற்றும் பணியிட பாதுகாப்பு போன்றவற்றில் ஒன்ராறியோ அரசு பிராந்திய அடிப்படையிலான அணுகுமுறையைக் கையாண்டு வருகிறது.

இவ்வாறு பாதுகாப்பாக செயற்படும்போது, ஒன்ராறியோவிலுள்ள ஒவ்வொரு பிராந்தியங்களிலும் பணிமுடக்க நடவடிக்கைகளிலுள்ள இறுக்கங்களில் தளர்வுகளை ஏற்படுத்தி ஒன்ராறியோவினை கோவிட்-19 ஆபத்திலிருந்து படிப்படியாக பாதுகாப்பாக திறந்து வைக்க முடியும்.

ரொறன்ரோ, பீல், யோர்க் பிராந்தியங்களைப் பொறுத்தவரை, 2021 பிப்ரவரி 22ஆம் திகதி திங்கட்கிழமை வரைக்கும் அனைவரையும் வீட்டிலேயே இருக்குமாறு போடப்பட்ட உத்தரவு தொடர்ந்தும் அமலில் இருக்கும். இறுதி முடிவுகள் அப்போதைய சூழ்நிலைகளுக்கமைய பொது சுகாதார தரவு மதிப்பாய்வுகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.

மக்களை வீட்டில் இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ள மானிலத்தின் பொது சுகாதார பிரிவில் அடங்கும் பகுதிகளில், வாடகைக் குடியிருப்பாளர்களை வீட்டு உரிமையாளர் வீட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான சட்ட நடைமுறைகள் இடைநிறுத்தி வைக்கப்படும். இது மக்கள் அவர்கள் வீடுகளிலிருந்து கட்டாயப்படுத்தி வெளியேற்றப்படுவதைத் தடுக்கும். மக்களை வீட்டில் இருக்குமாறு விடுக்கப்பட்ட உத்தரவு மீளப் பெறப்பட்ட பின்னர், வாடகைக் குடியிருப்பாளர்களை வீட்டு உரிமையாளர் வெளியேற்றுவதற்கான சட்ட நடைமுறைகள் வழமைக்குத் திரும்பும்.

*விஜய் தணிகாசலம், சட்டமன்ற உறுப்பினர் - ஸ்காபரோ றூஜ் பார்க்*